சிலம்பு ௩௪	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௧, பங்குனி ஏப்ரல், 1960	பரல் ௮

மீண்டுவந்தெய்திய திருத்தணிகை வெற்றிவிழா

வீடுகாத்தலும், நாடுகாத்தலும் பீடுடை ஆடவர் பேராண்மையாகும். வீடுகாத்தலினும் நாடுகாத்து நற்புகழ் எய்துதல் நனிமிகு சிறப்புடைத்தாகும். வீடுகாத்தல் ஒரு குடும்பத்திற் காற்றுந் தனித்தொண்டாகும். நாடுகாத்தல் பல குடும்பத்திற் காற்றும் பயனுடைய பெருந்தொண்டாகும். இம்முறையில் பிறர்க்கென முயலும் பெருந்தகையார் அளவிறந்த இன்னல்களுக்குள்ளாவரென்பது வரலாற்றுண்மையாகும். அவர்கட்கு மாற்றரால் நேரும் இடர்களினும் யார் பொருட்டு முயல்கின்றார்களோ அப்போற்றரால் நேரும் இடரும் இடுக்கண்ணும் பலவாம்; என்னே? இப்போற்றார் தம்முரிமையையும் கடமையையும் உள்ளவாறுணராமையும், முயல்வார் தம் பயன் கருதி முயல்கின்றனர் எனப் பிழைபடக்கொண்டு பேசுவதும் ஆகிய செய்கைகளாலெனன்க.

ஏறத்தாழக் கால்நூற்றாண்டுகட்கு மேலாகத் திருத்தணிகை, சித்தூர் முதலிய தமிழகப் பகுதியில் வாழும் பெரும்பான்மையான தமிழ்மக்களைத் தமிழை மறந்து தெலுங்கைக் கைக்கொள்ளும்படி செய்துவிட்டால் அவ்வூர்கள் எளிதாக ஆந்திர நாட்டுடன் இணைந்துவிடும் என்னும் இரண்டக எண்ணத்துடன் ஆட்சித்துறையின் மேலிடத்துள்ளார் பள்ளிகள், நகராண்மைக் கழகங்கள் முதலிய இடங்களிலெல்லாம் தமிழை அறவே இல்லாமற் செய்து தெலுங்கினையே புகுத்திவிட்டனர். தமிழ் சினண- பிழைப்பினைப் பெரிதென்றெண்ணி மொழியுரிமையை துப் பின் ஆனல்

கருதாதுங் காவாதுங் கைநழுவவிட்டனர். இந்நிலையில் 'மங்கலக் கிழார் என வழங்குங் குப்புசாமி முதலியாரவர்கள்' பெரிதுங் கவன்றனர்; வீறுகொண்டெழுந்தனர். ஊர் ஊராகச் சென்று உலையா முயற்சியால் தமிழ்மக்களைத் தட்டியெழுப்பி அவர்தம் தமிழுரிமையினை நன்குணர்த்தி வீறுகொண்டெழச் செய்தனர். ஆங்காங்கே தமிழ்ப் பள்ளிக்கூடங்களும் தமிழ்க் கழகங்களும் பல அமைத்தனர். படிப்பிக்கும் ஆசிரியராகத் தாமும், தமிழகத் துள்ள தக்கார் பலருமாகச் சேர்ந்து தமிழைப் பயிற்றுவித்தனர். பயின்ற அவ்வவ்வூரவர்களை ஆசிரிய நிலைமைக்குக் கொண்டு வந்தனர். பின்பு அவர்களையே ஆசிரியர்களாகவமர்த்தித் தமிழைப் பரப்பினர். கற்றாரும் மற்றாரும் தாய்மொழியாகிய தமிழ்மொழிக்கும் தங்கள் நாட்டுக்கும் உரிமைகொண்டாடவும் அவற்றை உயிரினும் மேலாகக் காக்குங் கடமையில் கைம்மாறு கருதாது எவ்வகைத் தொண்டும் புரிய முன்வரவுங் கூடிய பண்பமை உள்ளமுடையவராமாறும் பணிபுரிந்தனர். அம் மக்களும் அத்தகைய பண்பாடுடையவராகத் திகழ்ந்தனர். அம் மட்டோ!

தமிழகத்துள்ள திரு. வி. க. போன்ற பல பெரியார் களையும் அவ்வப்போது வருவித்துத் தமிழ்மொழிச் சிறப்பு, இலக்கண இலக்கிய மாண்பு, தொன்மை, பண்பாடு, நாகரிகம், சமயம், சைவசித்தாந்தம் முதலிய பலவற்றையும் பற்றி அரிய பெரிய சொற்பொழிவுகள் செய்வித்துத் தமிழ்மக்களுக்கு ஊக்க மும், ஆக்கமும், கிளர்ச்சியும் அமையுமாறு பணிபுரிந்துள்ளார்கள். இவர்களின் அருமை பெருமைகளைத் திரு. வி. க. அவர்கள் தம் வாழ்க்கைக் குறிப்புக்கள் என்னும் நூலில் குறித்துள்ளார்கள்.

"இவர்கட்குரிய பெயர் குப்புசாமி முதலியாரென்ப. இவர்கள் சேசாசலம் ஐயரவர்களிடம் அருந்தமிழ் பயின்றவர். வித்தியா னந்தர் என்னும் விழுமிய திருப்பெயரும் வழங்கி வருகின்றது. வாழ்க இப்பெரியார் புகழ், வாழ்க தமிழ்த்தொண்டு. வாழ்க தமிழ்மொழி. வாழ்க தமிழ்நாடு."

மொழிவாரி மாநிலப் பிரிவு நிகழ்ந்த காலத்தில் திருத் தணிகையும் அதனைச் சார்ந்த பல சிற்றூர்களும் ஆந்திரப் பகுதி யுடன் இணைந்துவிட்டன. அதனை மீட்டும்பெற வேண்டுமென்று பல பெரியார் பாடுபட்டனர். அவருளெல்லாம் தலைசிறந்தவராய் முன்னணியில் நின்று ஓவாது முயன்ற பெரியார் 'தமிழரசுக் கழகத் தலைவர் நம் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞான கிராமணியா'ரவர்களாவர். பண்பட்ட விளைநிலத்தில் வித்துப் [illegible]ி முளைதோன்றி வீறுகொண்டு வளர்ந்து, விளைவு மிகுதி [illegible]பா விழுப்பயன் தருதல்போல் மங்கலக்கிழார் என்னும்

அ

மாண்புடைச் சான்றோரால் பண்படுத்தப்பட்ட மக்களுள்ள மாகிய விளைநிலத்துப், பிறர்க்கென வாழும் பெற்றியமைந்த பெரியார் ம. பொ. சி. யவர்கள் விதைத்த உரிமை வீறுகொண் டெழுந்து திருத்தணிகை, திருவாலங்காடு முதலிய தமிழகத் திருவூர்கள் மீண்டு வந்தெய்துவதாகிய பெருவிளைவு கைகூடிற்று. இவ் விளைவினுக்கு அரும்பாடுபட்ட இருகண்போன்ற பெரியார் இருவர்க்கும் தமிழகத்தாரின் நன்றியும் வாழ்த்தும் என்றும் உரியவாகுக.

வெற்றிவிழா

1960 ஏப்பிரல் திங்கள் முதல்நாள் வெள்ளிக்கிழமை குறித்த வெற்றிவிழாக் காலை 8 மணிக்குத் திருத்தணிகை நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியின் திறந்த வெளியில் மிக்க சிறப்புடன் தொடங்கப்பெற்றது. இவ்விழாவை யொட்டித் திருத்தணிகை நகரே பேரழகுடன் காணப்பட்டது. இவ்வூரின் அண்மையி லிருந்தும், சென்னை மாநகரிலிருந்தும் பலர் வந்திருந்தனர். அரசியல் ஆணை வாயிலாகத் திருத்தணிகையும் அதனைச் சார்ந்த சில சிற்றூர்களும் ஆந்திர மாநிலத்திருந்து இந்நாள் தமிழ் மாநிலத்துடன் இணைகின்றது. ஊர்காவற்றுறை அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் தேசீயக்கொடியை ஏற்றுவித்தனர். செங்கற்பட்டு மாவட்ட ஊர்காவல் வியன்படையின் அணிவகுப் பினையுங் கண்ணுற்று நல்கும் மதிப்பினையும் ஏற்றுக்கொண்டனர். அப்பொழுது செங்கல்பட்டு மாவட்டத் தண்டல்நாயகர், திரு. கே. திரவியம், ஐ. ஏ. எஸ். அவர்களும், ஊர்காவற் கண்காணிப்பு மேலாளர், திரு. கே. இராதாகிருட்டிணரும் வந்திருந்தனர்.

அமைச்சர் பேச்சின் சுருக்கம்

'முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள புண்ணியத் திருவூ ரான திருத்தணிகை இன்று தமிழ்நாட்டுடன் இணைக்கப்படு கின்றது. இது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இதற்காகப் போராடிப் பல இன்னல்களுக்குட்பட்டாரனைவரையும் நாம் பாராட்டுதல் வேண்டும். மொழிவாரியாக மாநிலங்கள் பிரிந் தாலும் இமய முதல் குமரி வரையுள்ளன முற்றும் ஒரேநாடு என்பதில் நாம் பெருமைப்படுதல் வேண்டும். அதை மறந்து விடுதலாகாது. 'செந்தமிழ் நாடு' எனப் பாரதியார் பாடினர். எனினும் 'மன்னும் இமயமலை எங்கள் மலையே' எனவுங் கூறிப் போந்தனர். மாநிலங்கள் எவ்வாறு பிரிந்தாலும் பிறமொழியாளர் ஒவ்வொரு மாநிலத்திலும் சிறுபான்மையோர் இருக்கவே நேரிடும். அவர் தம் தாய்மொழிக்கு வேண்டுந் துணைபுரிவது ஆட்சியாளர் கடனாகும். அதற்கு வேண்டுவன மாநில வட்டாரத்துப் பின் வேண்டிய ஏற்பாடு செய்யும்.

ஆனல்

தமிழகத்துடன் திருத்தணிகை முதலிய பகுதிகள் இணையும் போது நமது மாநிலப் பகுதிச் சிற்றூர்களில் சில ஆந்திராவுக்குப் போகின்றன. அப்பகுதிகளின் வளர்ச்சியில் நாம் நடுநிலைகுன்றாது கருத்துச் செலுத்தியுள்ளோம். ஆனால் நமது மாநிலத்துடன் புதிதாக இணைந்துள்ள பகுதிகள் மிகவும் பிற்போக்கான நிலையிலிருக்கின்றன. அவற்றின் வளர்ச்சியில் நாம் முழுக் கருத்தும் செலுத்துதல் வேண்டும். பழைய சண்டைகளை நாம் மறந்துவிடுதல் வேண்டும். இவ்வட வெல்லைப் பகுதியின் முடிவு இத்துணை நேர்மையாகவும் இடரின்றியும் முடிந்தமைக்குப் பெருங் காரணம் ஆந்திர முதலமைச்சராகவிருந்த திரு. என். சஞ்சீவி ரெட்டியும், தமிழக முதலமைச்சர் திரு. காமராசரும் ஆவர். இவ்விருவரையும் நாம் நனிமிகப் பாராட்டுதல் வேண்டும். முருகப் பெருமானின் திருவருளைப் பயன்படுத்திக்கொண்டு புதிதாகச் சேர்ந்துள்ள சிற்றூர்ப் பகுதியின் வளர்ச்சிவேலையில் ஈடுபடுவோமாக.

மங்கலக்கிழார் உருவச்சிலை மங்கலம்

அமைச்சர் முருகப்பெருமானை வழிபட்டனர். பின்பு திருத்தணி பஞ்சாயத்துக் கட்டிடத்தின் பின்புறத்தில் விநாயகம் திடலில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர் 'மங்கலக்கிழாரின்' உருவச்சிலையினைத் திறந்துவைத்தனர். ஊராட்சி மன்றத்தலைவர் திரு. என். சுப்பிரமணியனும், காந்தி சோதிடர் திரு. வி. கே. சடகோபாச்சாரியாரும் அமைச்சருக்கு மாலைபோட்டனர். அமைச்சர் பேசுங்கால் திருத்தணி செங்கற்பட்டு மாவட்டத்தில் சேர்வதுபற்றி மகிழ்ச்சி தெரிவித்தனர். தமிழ்மக்கள் மனதைக் கவர்ந்திருக்கும் முருகப்பெருமான் தமிழ் மக்களின் பண்பாட்டினைக் காப்பாற்றுதல் வேண்டும். பண்பாடு மட்டும் போதாது வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக்கொள்ளுதல்வேண்டும் திருத்தணிக் குடிநீர்த் தேவையில் கருத்துச் செலுத்துதல்வேண்டும். அரசியலார் முயற்சிமட்டும் போதாது; பொதுமக்கள் ஒத்துழைத்தல் வேண்டும். பெரியார் மங்கலக்கிழார் அரும்பாடு பட்டவர். அவர்தம் 'உருவச்சிலை' இளைஞர்களுக்கு நல்ல வழிகாட்டியாக விருக்கும் என்றனர்.

தலைவர் வரும் தனிமாண்பு

பிற்பகலில் வடஎல்லைப் போராட்டத் தலைவரும், தமிழரசுக் கழகத் தலைவருமாகிய திரு. ம. பொ. சிவஞானக் கிராமணியார் சென்னையிலிருந்து ஊர்வலமாக மிக அழகுடன் அமைக்கப்பட்ட [illegible]ங்கு பொறியூர்தியில் திருத்தணிகை வந்து சார்ந்தனர். அ[illegible]ழியிலுள்ள பூவிருந்தவல்லி, திருமழிசை முதலிய ஊர்

கள் வழியாக அழைத்துவரப்பட்டனர். அவருடன் மற்றும் பல தலைவர்களும் வந்தனர். ஆங்காங்கு அணியமை வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. பொதுமக்கள் ஏராளமாகக் கூடி வரவேற்பளித்தனர். ஊராட்சி மன்றத்தினரும் பொதுமக்களும் வரவேற்பளித்தனர்.

ம. பொ. சி. படத்திறப்பு

பஞ்சாயத்துப்போர்டு கட்டிடத்தில் மாலையில் திரு.ம.பொ.சி. அவர்களின் உருவப்படத்தினை நிதிஅமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் திறந்துவைத்துப் பேசியதன் சுருக்கம்:" தமிழ் நாட்டின் எல்லைபற்றிய ஆய்வுகள் தீர்ந்துபோயிற்று. இனியும் தமிழரசுக் கழகம் ஓர் அரசியல் கட்சியாக நீடித்திருக்க வேண்டியது இன்றியமையாததா? நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுங் கட்சியோடு இணைந்து கொள்ளக்கூடாதா? இதுபற்றி ம. பொ. சி. சிந்தனை செய்தல் வேண்டுமென்று இந் நன்னேரத்துக் கேட்டுக்கொள்கிறேன். நல்லதொரு முடிவிற்கு அவர் வருமாறு முருகப்பெருமான் அருள்புரிய வேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றேன்" என்றனர்.

பலர் வருகை

சென்னையிலிருந்து தலைவர்களுடன் தமிழக வெற்றிவிழாக் குழுவினரும் கார்களிலும் உந்துவண்டிகளிலும், பேருந்து வண்டிளிலும் ஊர்வலமாக வந்தனர். வழி நெடுகவும் நல்வரவேற்புகள் அளிக்கப்பட்டன. நடிகர்கள் சிவாசி கணேசன், திரு பாலையா, டி. என். சிவதாணு, பிரேம்நசீர், சீராம், சாரங்கபாணி, டி. கே. சண்முகம், டி. கே. பகவதி முதலியோரும், ஏ. பி. நாகராசன், எம். ஏ. வேணு முதலியோரும் வந்துள்ளனர்.

கூட்டம்

திருத்தணி பஞ்சாயத்துக் கட்டிடத்தின் பின்புறமுள்ள விநாயகம் திடலில் மங்கலக்கிழார் அரங்கில் தனிச்சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள பந்தலில் மாலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நிதிஅமைச்சர் திரு. சி. சுப்பிரமணியத்திற்கும், திரு. ம. பொ. சிவஞானத்துக்கும் திருத்தணி ஊராட்சிமன்றத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. என். சுப்பிரமணியம் வரவேற்பிதழ்களைப் படித்தளித்தனர். அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேச்சின் சுருக்கம்: "சென்னை மாநில மறுஅமைப்பு நிறைவுறும் இவ்விழாவில் கலந்துகொள்வது குறித்து மகிழ்ச்சி. சென்னை-ஆந்திர எல்லைத் தீர்வு ஏறத்தாழ ஆறு ஆண்டுகளுக்குப் பின் தீர்ந்திருக்கிறது. இதுபற்றி மகிழ்ச்சியுறுதல் வேண்டும். ஆனல்

என்னைப் பொறுத்தவரை இதை ஒரு வெற்றி விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று விரும்பவில்லை. ஒருவருக்கு வெற்றி என்று சொல்லும்போது மற்றொருவர்க்குத் தோல்வி என்றேற்படுகிறது. நம் மக்கள் முன்னேற்றமடைய இனி எவ்வகையுதன தடையுமில்லை என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. திருத்தணிகைப் பகுதி மிகவும் மோசமான நிலையிலிருக்கிறது. மற்றப் பகுதிகளைப்போல் இப்பகுதியையும் முன்னேற்றமடையச் செய்ய எல்லா வகையான முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படுமென்று உறுதிகூற விரும்புகின்றேன்.

"மேலும் சிலம்புச்செல்வர் சிவஞானக் கிராமணியாரை நான் ஒன்று கேட்டுக்கொள்கின்றேன். ஒருவகையாக எல்லைத் தீர்வு தீர்ந்துவிட்டது. இந்த எல்லை ஆய்வு காரணமாகத்தான் இதுகாறும் இப்பகுதியில் வளர்ச்சி குறைபட்டிருந்தது. எல்லைக் கோட்டை இன்னும் திருப்பி எப்படிப் போடுவது என்பது பற்றி இனிக் கிளர்ச்சி தேவையில்லை. முற்றும் தமிழர் வாழுமிடம் முற்றும் ஆந்திரர் வாழுமிடம் என ஒருநாளும் அமையமுடியாது. மாநிலத்தின் உட்பகுதியிலும் இருமொழியாளரும் கூடித்தான் வாழ்தல் வேண்டும். இலட்சக் கணக்கான ஆந்திரர்கள் தமிழ் நாட்டில் வாழ்கின்றனர். அவர்களுள்ளத்தில் சிறிதுகூட அச்சமிருத்தல் வேண்டாவென்ற உறுதியை நாம் இன்று கொடுத்தல் வேண்டும். காங்கிரசு ஆட்சியில்லை, தமிழர்கள் ஆட்சியிருக்கும் வரை அந்தப் பண்பாட்டுடன்தான் நடந்துகொள்வோம். 'யாவருங் கேளிர்' என்பதே தமிழனின் பண்பாடு. இங்கு வாழும் இதர மொழி பேசுபவர்களின் உரிமை, பழக்க வழக்கங்களுக்கு எவ்வகை வருத்தமும் ஏற்படாதவாறு பாதுகாப்பளிப்பது தமிழரின் கடமையாகும்.

"சிறுபான்மையோரின் கல்வி வசதிகள் கொடுக்கப்படுதல் வேண்டும். இதன்பொருட்டுக் கேரளம், ஆந்திரம், மைசூர், தமிழ் நாடு முதலியவற்றின் ஆணை(பிரதிநிதிகள்)யாளர்கள் குழு ஒன்று கூடி எல்லைப் பகுதியில் வாழும் மொழிச் சிறுபான்மையோருக்கு என்னென்ன வாய்ப்புக்கள் அளிக்கப்படுதல் வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. இம்மாதம் 16 ஆம் நாள் அன்று தில்லியில் கூடவிருக்கும் தென்பால் மாநில மண்டலக் குழுவின் கூட்டத்தில் இப்பரிவுரைகள் ஆய்வுசெய்யப்பட்டு நடைமுறையில் கொண்டு வருவதற்கான நிலையான ஏற்பாடுகள் செய்யப்படும். மொழிச் சண்டை நீடித்துக்கொண்டுபோனால் முன்னேற்றம் தடைப்படும். ஆந்திரரை வென்று ஏதோ கிலைநிறுத்திவிட்டோம் என்ற மனப்பான்மையோடில்லாமல் திருத்தணியில் வாழும் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிகாணுதல்

வேண்டும். பெரிய தேரை எல்லோரும் சேர்ந்து ஒரே திசையில் இழுப்பதுபோலப் பல்வேறு மொழியினரும் வேற்றுமையின்றி ஒன்று சேர்ந்து ஒற்றுமையோடு முயற்சி செய்தாற்றான் ஆற்றல் பெருகும். இவ்விழாவைக் கொண்டாடும்போது ஒன்றுபட்ட நிலையில் நாம் எல்லோரும் கூடி வாழ்வோம் என்ற உறுதியை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

"இத்தகைய நன்னாள் வருதல் வேண்டுமென்று திரு. ம. பொ. சி. பாடுபட்டது எனக்குத் தெரியும். மற்றெல்லோரைக் காட்டிலும் அவருக்குத்தான் இன்று மகிழ்ச்சி மிகுதி. திரு. ம. பொ. சி. எங்கள் கட்சியுடன் சேர்தல்வேண்டுமென்று நான் கூறவில்லை. முன்னேற்ற நோக்கமுள்ள கட்சிகள் மேலும் வலுப் பெறுதல் வேண்டுமாயின் ஒன்றுசேர்தல்வேண்டும். எதற்கு ஆதரவு கொடுத்தல் வேண்டுமென்பதனைச் சிந்தனை செய்ய வேண்டுகின்றேன்" என்றனர்.

திரு. ம. பொ. சி. சொற்பொழிவு

தளபதி கே. விநாயகத்தின் உருவப்படத்தைத் திறந்து வைத்துப் பேசியதன் சுருக்கம்: "இது தமிழரசுக் கழகம் நடத்துந் தனி விழாவன்று. காங்கிரசு, அரசாங்கம், கழகம் எல்லோரும் சேர்ந்து, ஏன்—தமிழினத்தினர் எல்லோருமே சேர்ந்து, நடத்தும் தேசியத் திருவிழா என்றுதான் கொள்ளுதல்வேண்டும். ஆந்திரர்களை எதிர்த்துப்பெற்ற வெற்றி விழா அன்று வேண்டுமானால் அரசியலாரை எதிர்த்துப் போராடியதன் வெற்றிவிழா என்றுகூட வைத்துக்கொள்ளலாம். ஆட்சி முறையிலிருப்பவர்களுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையேயுள்ள நிலை எப்பொழுதுமே இன்னலான இடர்ப்பாடான நிலைதான்; அறமுறையாக, நடுவுநிலையாக, பொறுப்புத்தன்மையோடு மக்கள் நடந்து கொள்ளுதல் வேண்டும். தமிழருக்கும் தெலுங்கருக்கும் பூசல் ஏற்படுவதை நான் விரும்புபவனல்லன். தமிழன் என்ற பெருமையோடு இந்தியன் என்றவுணர்ச்சியும் எனக்குண்டு. தணிகைத் தமிழர்கள் இனவெறி கொண்டவர்கள் அல்லர்.

"மேலும் அரசியலார் புதிய வரவு செலவுத் திட்டத்தைத் துவங்கும் நாள் இது. திட்டத்தில் பற்றாக்குறைவாகவே இருக்கலாம். ஆனால் திருத்தணிகை அரசியலாருக்குப் புதிய வரவு என்றுகூற விரும்புகின்றேன். மேலும் பஞ்சாங்க முறைப்படி பார்த்தால் உரோகிணியுந் திங்களும் கூடுகின்ற நாள் இது. தணிகையும் தமிழனும் கூடும் புனிதநாள். 1916 ஆம் ஆண்டு ஏப்பிரல் முதல்நாளிற்றான் தணிகைத் தாலுக்கா வடவாற்காட்டிலிருந்து பிரிந்து சென்றது. வரலாறு தற்போது திரும்பு

கிறது. துணையாக முருகப்பெருமான் திருவருள் இக்கிளர்ச்சிக்கு இருந்தது. முன்னாள் முதலமைச்சர் ராஜாஜிக்கும், தற்போதுள்ள முதலமைச்சர்க்கும், நிதியமைச்சர்க்கும் இந்நாளில் நன்றி செலுத்துகின்றேன்.

நமக்குச் சேர்ந்துள்ள பகுதி வளமற்றதென்று கூறுகின்றனர். இஃது இயற்கையாக ஏற்பட்டதன்று; செயற்கையானது. பொன்னேரி, திருவள்ளூர்ப் பகுதிகள் வளப்படுத்தப்பட்டன. இப்பகுதிகளில் கருத்துச் செலுத்தப்படவில்லை. இன்று காணப்படும் வெற்றி இனவெறியினால் அல்ல; தெய்வ பத்தியின் வெற்றியாகும். 'ஆணும், பெண்ணும்' சேர்ந்ததுதான் தெய்வீக சத்தி. தமிழகத்தின் தெற்கு எல்லையிலே பெண்தெய்வம்; வடக்கே ஆண் தெய்வம். தெற்கே 'குமரி'; வடக்கே 'குமரன்'. தாய்த்தமிழ் நாட்டை இரு தெய்வங்களும் துணையாகக் காக்கின்றன. தெய்வநெறியோடு கலந்த வெற்றி இது."

அரசியல் சம்பந்தமாக அமைச்சர் சி. சுப்பிரமணியம் விடுத்த ஆய்வுக்கு விடையாக ம. பொ. சி. கூறியது: "எளிதாக விட்டுவிட முடியாது. நான் தனி மனிதன். அவர் ஆட்சியின் ஆணையாளர். இம்மேடையினை ஓர் ஆராய்ச்சிச் சொற்போர் மேடையாக ஆக்க நான் விரும்பவில்லை. எல்லைத் தீர்வுக்கு இஃதொரு காற்புள்ளியேயாகும்; முற்றுப்புள்ளியன்று. காற்புள்ளி போட்டுக்கொண்டே திருத்தணியை வரவேற்கின்றோம். வடக்கு எல்லை எது என்பது பற்றிக் காலம் தீர்ப்புக்கூறட்டும். மைசூர் பம்பாய்எல்லைத் தகராறுகள் இன்னும் நீடித்து வருதலைக் காண்க. விழாவிற்கு வந்திருக்கும் தமிழ்நாட்டுக் கலைஞர்கள் எவரும் தமிழரசுக் கட்சி உறுப்பினர் அல்லர். தமிழர் என்ற உணர்ச்சியினால் விழாவில் கலந்துகொண்டுள்ளனர்" என்றனர்.

மாயூரத்து அன்பர்

தமிழகத்தோடுசேரும் வேலன் குன்றத்துக்கு (திருத்தணி) 'எல்லைக் காவலர்' என்னும் பெயர் பொறித்த இரண்டு சிறப்புப் பேருந்து வண்டிகளில் தொண்ணூற்றுநான்கு அன்பினர் மாயூரத்தினின்றும் இவ்விழாவில் கலந்துகொள்ள வந்துள்ளனர். இவ்வேற்பாட்டை மாயூரம் தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்துள்ளவர் செய்துள்ளாரெனத் தெரிகிறது.

குறியாக் கொடையாளர் குடும்பத்திற்கு உதவி

குறியாக் கொடையாளர் எனினும் தியாகிகள் எனினும் ஒன்றே. நடிகர் திலகம் சிவாசி கணேசன் அவர்கள் வடவெல்லைப் போராட்டத்தில் 'குறியாக் கொடையாளருள்' ஒருவராய் நின்று

உயிர்நீத்த 'பழனி மாணிக்கத்'தின் குடும்பத்தினருக்கு ரூ. 501 நன்கொடை வழங்கினார். நடிகர் திரு. பாலையா சார்பில் மற்றொரு தியாகி திருவாலங்காடு 'கோவிந்தசாமி'யின் குடும்பத்தினருக்கு ரூபா 501 நன்கொடை வழங்கப்பட்டது.

திருத்தணி ஊராட்சி மன்றத்தலைவர் திரு. என். சுப்பிரமணியத்தின் படத்தை விநாயகம் திறந்துவைத்தனர். மற்றும் பல தலைவர்களும் பேசினர். இரவில் காருகுறிச்சி திரு. அருணாசலத்தின் நாதசுர இசையும், குமாரிகள் சூலமங்கலம் சகோதரிகளின் இன்னிசை விருந்தும் நிகழ்ந்தன. விழாவும் இனிது நிறைவுற்றது.

வாய்ப்பு வரும்

தமிழகத்தின் வடவெல்லைப் போராட்டம் 1947ஆம் ஆண்டிலிருந்தே நடந்துவந்திருக்கிறது. குறிப்பாகத் திருத்தணியி[ல்] அமைதி மறியல் பல நடந்துள்ளன. நூற்றுக் கணக்கான தமி[ழர்] கைது செய்யப்பட்டனர். இரு தமிழ்த் தொண்டர்களி[ன்] உயிரும் பறிபோயின. அதன் பின்புதான் இந்தியப் பேரரசினரால் ஏற்படுத்தப்பட்ட திரு. படாஸ்காரின் ஆய்வுக்குறிப்பு வெளிவந்தது. அதன்படியே அவ்வப்பகுதிகள் கைம்மாறுகின்றன. இவற்றால் வடவெல்லைப் போராட்டத்தின் முழுவெற்றியும் எய்தியதாக எவரும் கூறுவதற்கில்லை. தமிழ்நாட்டின் எல்லையாகப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தெற்கில் 'கன்னியாகுமரியும்' வடக்கில் 'வேங்கடமும்' வெளிப்படையாக அமைந்து வந்திருப்பதற்குள்ள அகப்புறச்சான்றுகள் அளவில்லன உள்ளன. அதனால் சில ஆண்டுகளுக்குப் பின்பேனும் 'கன்னியாகுமரி'யைப்போல் 'திருப்பதியும்' தமிழ்நாட்டுடன் சேரத்தக்க வாய்ப்பு வருமென்பதொருதலை.

தொடக்கத்தில் ஆந்திரர் சென்னைக்கே பொருந்தா உரிமை கொண்டாடினர். அப்பொழுது முதல் அமைச்சராகத் திகழ்ந்த ஆற்றல் மிக்க இராசாசியவர்களின் பெருமுயற்சியால் சென்னை தமிழர்க்காகியது. அதுபோல் இப்பொழுது சென்னை முதலமைச்சராகத் திகழுந் திரு. கே. காமராசர் அவர்களின் அன்பாற்றல்களாலும், ஆந்திர முதலமைச்சராகவிருந்த திரு. என். சஞ்சீவி ரெட்டியவர்களின் ஆற்றலாலும் இவ்விருவர்க்கும் ஏற்பட்டுள்ள இணக்க மனப்பான்மையின் நல்லுறவாலும் இத்துணை எளிமையில் இவை மீண்டன. இவ்வனைவரையும் நாம் மனமார வாழ்த்திப் போற்றுகின்றோம்.

திருநெல்வேலி கஉ ஆவது தமிழ்த் திருநாளில்

மூன்றாவது சிற்றிலக்கிய மாநாடு

திருநெல்வேலிச் சந்திப்பு—தருமபுர மடாலயத்தில் குரு ஞானசம்பந்தர் திருமுறைக் கழகம், தருமையருள் பெறு நெல்லை அருணகிரி இசைக்கழகம்—இவற்றின் சார்பில் 6-3-60 முதல் தொடங்கி நடைபெற்ற கஉ ஆவது தமிழ்த் திருநாளில் கடைசி நாளாகிய 13-3-60 ஞாயிறன்று சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில் ங ஆவது சிற்றிலக்கிய மாநாடு நடைபெற்றது. அன்று காலை 10-மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கின. வித்துவான் திரு வ.ச. நடராச பிள்ளையின் இறை வணக்கப் பாடலுக்குப் பின், கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினர்கள். அவர்கள் தமது உரையில் கழகம் தமிழுக்கும் சைவத்திற்கும் நாற்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து புரிந்து வரும் நற்பணிகளை விளக்கினர். பழந்தமிழ் நூல்களை மக்களிடையே பரப்புதற்காகவே இத்தகைய மாநாடுகளைக் கூட்டுவதாகவும் மாநாட்டுச் சொற்பொழிவுகளையெல்லாம் நூல் வடிவில் வெளியிடுவதாகவும் குறிப்பிட்டனர். மாநாட்டுத் தலைவரையும் உரையாளர்களையும் வரவேற்று மாலை சூட்டினர்.

பின்பு மாநாட்டைத் தொடங்கிவைத்த ஒய்வு பெற்ற மாவட்ட ஆட்சியாளர் திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M.A., I.A.S. கழக வெளியீடுகளின் அழகையும் சிறப்பையும் பாராட்டினர். கழகம் தமிழுக்கு ஆற்றிவரும் பணிகளைப் போற்றினர். கழகம் வளர்ந்தோங்க வாழ்த்தினர்.

மாநாட்டுத்தலைவர் மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் திரு. சி. இலக்குவனர், M. A., M. O. L. தமது தலைமையுரையில் தமிழில் உள்ள சிற்றிலக்கியங்களின் சிறப்பையும், மாநாட்டில் உரையாற்றுதற்கு இடம்பெற்றுள்ள பரணி, பள்ளு, குறவஞ்சி நூல்களின் சுவையையும் விளக்கினர். பரணிநூல்களுள் தலையாய கலிங்கத்துப்பரணி, பள்ளு நூல்களுள் தலையாய முக்கூடற் பள்ளு, குறவஞ்சி நூல்களுள் தலையாய திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகியவற்றின் சிறப்புக்களை விரித்துரைத்தனர். தமிழக மக்களின் அகப்புற வாழ்வின் நலங்களையெல்லாம் அவற்றினின்று எடுத்து விளக்கினர்.

தலைவர் உரைக்குப்பின் கலிங்கத்துப் பரணியைப்பற்றித் திரு. இரா. சுந்தராம்பாள், M. A., தக்கயாகப் பரணியைப்பற்றி வித்துவான் திரு. ந. சேதுரகுநாதன், பாசவதைப் பரணியைப் பற்றி வித்துவான் திரு. க. சிதம்பரதாணு, முக்கூடற் பள்ளுப்

பற்றித் திரு. ரெ. சுப்பையா பிள்ளை, M.A. ஆகியோர் காலைநிகழ்ச்சியிற் கலந்து உரையாற்றினர். சென்னை அரசாங்க ஆட்சிமொழிச் சிறப்பு அலுவலர் திரு. கீ. இராமலிங்கமுதலியார், M.A. மாநாட்டுச் சொற்பொழிவு நூலைப் பாராட்டி உரையாற்றி அதனை வெளியிட்டனர்.

மீண்டும் மாலை 5-30 மணிக்கு மாநாடு தொடங்கியது. செல்வி திரு. இரா. கோமதியின் இறைவணக்கப் பாடலுக்குப் பின் சொற்பொழிவுகள் தொடங்கின. திருமலைமுருகன் பள்ளுப் பற்றி வித்துவான் திரு. வி. குஞ்சிதபாதமையர், திருக்குருகூர்ப் பள்ளுப்பற்றிப் பண்டித வித்துவான் திரு. இராமாநுச ஐயங்கார், திருக்குற்றாலக் குறவஞ்சியைப் பற்றி வித்துவான் திரு. அ. இராசகோட்டியப்பன், கும்பேசர் குறவஞ்சியைப்பற்றித் திரு. கு. பரமசிவன், M.A., சரபேந்திர பூபால குறவஞ்சியைப் பற்றித் திரு. ஆ. அருளப்பன், B.A., மீனாட்சியம்மை குறம் பற்றிப் பண்டித திரு.ச. சாம்பசிவன் ஆகியோர் உரையாற்றினர். பின்பு மாநாட்டு வாழ்த்துச் செய்திகளை வித்துவான் திரு. அ. க. நவநீத கிருட்டிணன் வாசித்தார். இறுதியில் மாநாட்டுத் தலைவர் திரு சி. இலக்குவனார் நிறைவுரை வழங்கினர். அவர்கள் தமது உரையில் மாநாட்டுச் சொற்பொழிவாளர்களின் சிறப்பையும் அவர்கள் ஆய்வுரை நலங்களையும் பாராட்டினர். மாநாட்டை நடாத்திய கழகங்கள் மூன்றனையும் பாராட்டினர். கழக ஆட்சியாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை நன்றியுரை நவின்றனர்.

இரவு 9-30 மணிக்கு நெல்லை வில்லிசைச் செல்வர் திரு. ஐயன் பிள்ளை குழுவினர் "பரணிகொண்ட பார்த்திபன்" என்ற கதையினை வில்லுப்பாட்டில் இசைத்து முழக்கினர். இரவு 10-30 மணிக்கு நெல்லை அருணகிரி இசைக்கழக நாடகப் பகுதி உறுப்பினர் 'தியாகம்' என்ற நாடகத்தை நடத்தினர். இறுதியில் அ. இ. கழக அமைச்சர் திரு. இராம. கனகசபாபதி பிள்ளை எல்லோருக்கும் நன்றி கூறினர்.

கூற்றுயின் கூறு!

[திரு. பொ. திருஞானம்]

நல்லதமிழ் நானிலத்தில் நன்மைதரு நம்மொழியை
நல்லதமிழ் இல்லையெனக் கூறினையே—நல்லதமிழ்
கற்றுவிட்டுக் கூறதனில் மாசினையே வீரமுடன்
மற்றுமுள ஊனமொழி விட்டு!

டாக்டர். சு. சங்கரராசு எம். ஏ., பி. எச். டி.,

வாழ்க்கைக் குறிப்பு

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சங்கரநயினார் கோவிலில் 1920ஆம் ஆண்டில் இவர் பிறந்தார். இவரின் தந்தையார் இளம் பருவத்தில் விரைந்து கவிபாடும் திறம் பெற்றிருந்தவராகையால் "நிமிஷக்கவி" சுப்பையா நாயுடு என்று அழைக்கப் பெற்றார். திரு. சங்கரராசு, சேர்மாதேவி, பாளையங்கோட்டை முதலிய இடங்களில் கல்வி பயின்ற பின்னர் 1932இல் தம் தந்தையாருடன் வட இந்தியாவுக்குச் சென்றார். அங்கே தயாள்பாக், ஆக்ரா முதலிய இடங்களில் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் துவக்கத்திலிருந்து முறையே பயின்று எம். ஏ., பட்டம் பெற்றார். அத்துடன் சாகித்யரத்தினம் (அலகாபாத்), பிரபாகர் (பஞ்சாப்) முதலிய பிற பட்டங்களும் பெற்றார். 1944இல் அகில இந்தியப் பேச்சுப் போட்டியில் இவருக்கு முதற் பரிசு வழங்கப்பட்டது. 1945இல் மத்திய சுங்க வரித்துறையில் "ரேஞ்சு ஆபீச"ராகப் பணியாற்றினார். தமது உளப்பாங்கிற்கு அப்பணி ஏற்றதன்று என உணர்ந்து அதை விடுத்து 1946இல் ஆலப்புழையில் உள்ள சனாதன தர்மக் கல்லூரியில் இந்தித் துறைத் தலைவராகப் பணி மேற்கொண்டார். 1947இல் திருவனந்தபுரம் பல்கலைக் கழகக் கல்லூரியில் இந்தி மொழி விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1948இல் திருவாங்கூர் மன்னர் சுவாதித் திருநாள் அவர்களைப் பாராட்டி நூற்றாண்டு விழா நினைவு இந்திக் கவிதை மலரை இயற்றி வெளியிட்டார்.

1949இல் இவரது இந்திக் கவிதைத் தொகுப்பு (கீதோ பகார்) வெளிவந்தது. ஏற்கெனவே 1944இல் இவர் கைவல்ய நவநீதத்தின் சில பகுதிகளைத் தம் தந்தையாரின் துணையுடன் இந்தியில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்.

1952 இல் இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் இந்தி மொழித்துறைத் தலைவராகப் பணி ஏற்றார். தமிழ் இலக்கியங்களின் சிறப்புக்களை இந்தி மொழியினர் அறியும் வகையில் தமிழ் இலக்கியங்களைக் குறித்தும், நம்முடைய புலவர் பெருமக்களின் கவிதைகளை இந்திக் கவிதைகளுடன் ஒப்பிட்டும் பல அரிய ஆராய்ச்சி மிகுந்த நூல்களும், கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். அவை பலராலும் பாராட்டப்பட்டுள்ளன.

தமிழ் எழுத்தாளர் சங்கம் 1958ஆம் ஆண்டு நாகர்கோவிலில் நடைபெற்ற மாநாடு, இந்தி மொழியின் மூலம் தமிழுக்கு இவர் செய்துள்ள தொண்டினைப் பாராட்டி இவருக்குப் பொற்பதக்கம் அளித்துச் சிறப்பித்திருக்கிறது.

உத்தரப்பிரதேச மாநில அரசு, சென்னைப் பல்கலைக் கழகம் முதல் இந்தி வெளியீடும் இவரால் எழுதப்பட்டதுமான "கம்பரும் துளசியும்," என்னும் ஆராய்ச்சி நூலுக்குப் பரிசு வழங்கியுளது.



டாக்டர் சங்கரராசு அவர்கட்கு டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பரிசு வழங்குதல்

அண்மையில் "கம்பராமாயணமும் துளசி இராமாயணமும்," என்ற ஒப்பு நோக்கு ஆராய்ச்சிப் பெரு நூலுக்காகச் சென்னைப் பல்கலைக் கழகம் இவருக்குத் தத்துவப் பேராசிரியர் (Doctor of Philosophy) என்னும் பட்டம் வழங்கியுள்ளது.

சென்னைக் "கம்பன் மன்றம்" முதலிய பல நிறுவனங்கள் இவரது தமிழ்த் தொண்டுக்காகப் பாராட்டுரைகளும், வாழ்த்து மடல்களும் வழங்கியுள்ளன. இந்தியில் இவர் எழுதியுள்ளவற்றில் குறிப்பிடத்தக்கவை: (க) திருக்குறள் இந்தி மொழிபெயர்ப்பு (உ) தமிழ் இலக்கிய வரலாறும் தற்காலத் தமிழ் இலக்கியமும், (௩) கம்பரும் துளசியும் (ஆராய்ச்சி நூல்) (௪) விடுதலைக்குப் பின் தமிழிலக்கிய வளர்ச்சி (௫) வள்ளுவரும் கபீர் தாசரும் (அறம்) (௬) வள்ளுவரும் பிகாரிலாலும் (இன்பம்) (௭) சிலப்பதிகாரக் கதை (உரைநடை) (௮) மணிமேகலை (௯) பௌத்தமும் தமிழும் (௧௦) சைவ சித்தாந்தமும் திருஞானசம்பந்தரும் (௧௧) திருநாவுக்கரசர் (௧௨) ஆண்டாளும் மீராவும் (௧௩) குலசேகரரும் ரசுகானும் (௧௪) தமிழ் இந்தி எழுத்துக்களின் ஒப்பு நோக்கு (௧௫) மதுரைமா நகர்.

மறைமலையடிகளின் தமிழ்நடை

[வித்துவான். நெல்லை. க. சுப்பிரமணியன்]

தனித்தமிழ் நடையின் வேந்தர் என்ற பாராட்டுக்குரிய மறைமலையடிகளின் உரை நடையை விரும்பாதவர்களும் தமிழ் நாட்டில் இருக்கின்றார்கள். அவர்கட்கு, மறைமலையடிகளின் தமிழ்நடைச் சிறப்பை விளக்கிக் காட்டுவது எம்மனோர் கடமை யாகும்.

இனிப்புப் பண்டங்களை விரும்பாத மக்களும் உலகில் உள்ளனர். அன்னார் நீரிழிவு நோய்வாய்ப்பட்டவர் என்பது அது கொண்டு உய்த்துணரலாம். முறுக்கு முதலான வன்பண் டங்களைத் தின்றின்புற விரும்பாதவர்களும் இருக்கின்றனர். அத்தகையோர் பொக்கைவாயர்; அதனால் பொரிமாவையே பெரிதுங் காமுறுவர் என்பது அது கொண்டு ஊகித்தறியலாம்.

மறைமலையடிகளின் தமிழ்நடையை விரும்பாதவரும் ஈண்டுளர் என்றால், அன்னார் தமிழ்நூல் எதையும் ஆழ்ந்து கற்று ஆராயும் அறிவு மதுகை இல்லாதவர் என்றும்; இனிமைத் தமிழின் தனிமைச் சுவையைத் தக்கவாறு நுகரும் பயிற்சி இல்லாதவர் என்றும் நாம் பகுத்தறிகின்றோம்.

இனி, நடையுயர்வு கருதிச் சொற்களைத் தேடி அலைபவர், கருத்தாழம் இன்றி எழுதுவார் என்பர் சிலர். ஆசிரியர் மறைமலையடிகளோ நிறை தமிழ்ப்புலவர் ஆதலின், கருத்துக்குப் பொருத்தமான இன்சொற்கள் அவரைத் தேடி ஒன்றனுக் கொன்று முந்திவந்து நிற்குமேயன்றி அவர் எழுதும்பொழுது, சொற்களை நாடி அலையவில்லை என்பதை, அவர் யாத்த நூல்களை மேற்போக்காக ஒருசிறிது கற்றாரும் தெற்றெனத் தெரிவர்.

கருத்துஞ் சொல்லும் பிரிவறப் பொருந்தி நிற்கும் உண்மையை யாவரும் அறிவர். அல்லாமலும், எழில்மிகுந்த பொன் அணிகளை மாசில்லாத நற்பேழைகளில் வைத்துப் பேணுதல்போல, உயர்ந்த கருத்துக்களையும் சிறந்த சொற்களால் ஆற்றலொடு வெளிப்படுத்துவதே நல்லாசிரியன்மார் எல்லார்க்கும் இயல்பாகும். இந்த இடத்தில் நம் செந்தமிழ்த் தொல்லாசிரிய ரான தொல்காப்பியர், "இழுமென் மொழியான் விழுமியது நுவறல்" என்று இயம்பிய தொடரானது, எமது நினைவின்கண் தோன்றி இனிக்கின்றது.

மறைமலையடிகளும் தம் ஆராய்ச்சியின் முடிவாக வெளிப் படுத்திய உயர்ந்த கருத்துக்களைத் தக்க தமிழ்ச் சொற்றொடர்

களால் மிக்க வன்மையோடு தம் தனிச் செந்தமிழ் நூல்களில் நிலைநிறுத்தி மாண்பயன் விளைவித்திட்டார்.

அஃது ஒருபுறம் இருக்க, "இலக்கியப் படைப்பு" என்னும் எமது நூலில் நாம் சொன்னபடி, "ஒவ்வொருவர்க்கும் பணவசதி, உடலளவு, மனப்பான்மைகளுக்கு ஏற்ப உடைவகை வேறுபடுவதுபோல், நடைவகையும், அவரவரும் பெற்றிருக்கின்ற மொழித்தேர்ச்சி, வாழ்க்கைநிலை, மனப்பண்பு இவற்றின் காரணமாக மாறுபடக் காண்கின்றோம்." மறைமலையடிகளின் நூல் நடையில் எல்லா இடங்களிலும்,

"கல்வி தறுகண் இசைமை கொடைமைஎனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே."

என்ற தொல்காப்பியனார் கருத்துப்படி. கல்விப் பெருமிதவுணர்வே மல்கித் தோன்றுவதைக் கற்றோர் அனைவரும் கசடறவுணர்ந்திருப்பர். பெரிய குன்றின் மீதிருந்து, கீழுள்ள இடங்களில் பணிவோடமர்ந்த அவையோரை நோக்கி, அறிவு வீரர் ஒருவர் பேருரை நிகழ்த்துவது போலவே, அடிகளின் நடைப்போக்கு ஆங்காங்கே அமைந்து திகழ்வதையும் அறிவுடையோர் தெரிந்து வைத்திருப்பர். இதுகொண்டு, அடிகளை அவாவாதவர்களை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை.

மறைமலையடிகள் தமது இன்றமிழ் நடையில் வடசொற் புகுவதால் ஏற்படும் பொல்லாங்கினைப் பின்றைப் பருவத்தில் நன்றாக உணர்ந்தார். ஆகலின், ஆரியம் ஆங்கிலம் முதலான வேற்றுமொழிச் சொற்கள் பெரும்பாலும் விரவாமல், தூய தனிச் செந்தமிழிலேயே தம் கட்டுரை நூல்களை இயற்றுவாராயினர். இன்னும், வடநாட்டு ஆரிய நூல்களின் பொய்ம்மையையும் இழிபையும் தென்னாட்டுத் தமிழ்நூல்களின் மெய்ம்மையையும் உயர்பையும் கூறுபடுத்திக் காட்டித், தமிழ்மக்கள் தம் சமயம் நாகரிகம் மொழி ஆகியவற்றில் தனிச் சிறப்புடையவர்கள் என்பதை ஆணித்தரமாக நிலைநாட்டி, எதிர்காலத் தமிழரசுக்குப் பகைவர் இவர், பாதுகாவலர் இவர் என்னும் உணர்ச்சியையும் தோற்றுவித்து, ஆரியர்தம் கூற்றுவராகத் - தமிழர்தம் காவலராகத் திகழ்ந்ததால், அடிகளை விரும்பாதவர் சில்லோர், நாடு மொழி இனம் இவற்றின் நலம்பேணும் பீடுடைய மறைமலையடிகளின் பெருநூல்களைத், தனித் தமிழின் இனித்த சுவையுணராதார் அது காரணமாகக் குறைகூற முற்பட்டால், அவர்கட்காகப் பெரிதும் இரங்குகின்றோம்.

இனி, மறைமலையடிகள் நீண்ட பெருஞ் சொற்றொடர்களை ஆண்டு, தம் நூல்களை நடத்திச் செல்கின்றார்; ஆதலின்,

அவற்றைப் பொறுமையாயிருந்து கற்கும் திறமான பயிற்சி இல்லாதார், அடிகளின் தமிழ்நடைமீது அகக் காழ்ப்பு மிகக் கொண்டுள்ளார். நெடுவாக்கியங்களைக் கையாண்டு கடுமையான நடையில் கருத்துக்களை அடிகள் வெளிப்படுத்தியிருப்பினும், அறிவு ஒருங்கி உணர்வு நுணுகிக் கற்பார்க்கு அவை தெளிவாக விளங்கித் தோன்றுகின்றன. எனவே, இந்த இயல்பு காரணமாகச் சிந்தை நொந்துரைப்போர் பொருட்டுப் பரிவு கொள்கின்றோம்.

அமைதி

[வித்துவான் மாவை. துரை. பழநி மகாதேவன், ஆம்பூர்.]

அமைதியே இன்பம், அமைதியே ஆக்கம்,
அமைதியாந் தாயெமை ஆளு கின்றனள்,
பொன்று நலந்தரு பொறைப்பா லீவள்,
வாழ்க்கை நூலை வாரி வழங்குவள்,
தந்ததோர் பொறையி னளவே எம்மாற்றல்;
ஏற்றம் தரும்பொறை! ஆஆ! என்னே!!
சோர்விலை, தாழ்விலை, நின்ற நிலையின்
கருத்தி னொளியைக் காட்டும் அஃதே,
சான்றாண் மைதரும், அழுக்கா றகற்றும்,
தீவழி விலக்கி நல்வழி காட்டும்,
அறநல் உணர்வும் ஆன்றோர் சேர்க்கையும்
பீடுடை எண்ணமும், பெட்புறு நலனும்
நாடும் ஒழுக்கமும், நல்ல வூக்கமும்,
உலையா முயற்சியும், அலையா வாழ்வும்
என்பும் உருகும் அன்பு வழங்கலும்,
வன்பு நீங்கிய இன்பும், நெடுநீர்
மறவி மடிதுயில் நீக்க லோடு
செருக்கச்ச மிடுக்கண் பற்றுள்ளம் இன்ன
விலக்கலும், விருந்தயர் வுடனே
பேதைசொல் நோன்றலும் அமைதியாற் பேறே.

ஓவியம்

[திரு. தி. நா. அறிவு ஒளி]

(செல்வி சிலம்பு, ௩௪, பரல் ௭, ௩௩௨ ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொற்பாவைக்குப் படிஎடுக்கத் தலைவியின் இடுப்பு எங்கே இருக்கிறதென்று தெரியாதாம்! அவ்வளவு நுண்மையான இடையாம் தலைவிக்கு! 'படிஎடுத்தல்' என்பது பாவை செய்தற்கு முதல் அச்சிலிருந்து வேறு சிலை வடித்தலாம்.

விளையாட்டுப் பாவை

மேலும் அக்கால இளமகளிர் பெண் சிலைகளைச் செய்து வைத்துக்கொண்டு விளையாடுவது வழக்கம். இன்றும் பெண் குழந்தைகள் மரப்பொம்மைகளை (மரப்பாச்சி) வைத்துக்கொண்டு அவற்றிற்கு எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டியும், பால் புகட்டியும், அழுகை ஆற்றியும் பலப்பலவாறு கற்பித்து விளையாடக் காணலாம். அதுபோலத் தலைவி 'அரும்பாத முலையைச் சிவந்த வாயை உடைய பசிய பாவைக்கு 'அழாதே' என்று கூறிக் கண்ணீர் துடைத்து, ஊட்டி விளையாடினாள் எனக் குறிக்கிறார் புலவர். இத்தகைய விளையாட்டுப் பாவைகளைப் பண்டு தச்சரும், கொல்லரும் பலப்பல செய்து வழங்கிய கலைவரலாற்றுண்மை கூர்ந்து நோக்கி உணர்தல் வேண்டும்!

"இரும்பா மனம்கொண்ட வாறென்னை நீ? தன்னை எத்தி என்றும்
வரும்பா வலர்க்கருள் வாணன்தென் மாறை வளவயலில்
கரும்பார் மொழியாய் அழல்! என்று கண்ணீர் துடைத்து அணைத்து உன்
அரும்பா முலைசெய்ய வாய்ப்பசும் பாவைக்கு அளிக்குமின்னே"

(த. வா. கோவை : ௩௩௭)

மேற்கூறிய பாவைதவிர வண்டலம் பாவைகளையும் மகளிர் விளையாடுதற்குப் பயன் படுத்துவர். வண்டல் மண்ணினால் பாவைகள் செய்து கடற்கரையில் விளையாடுவர் மகளிர். சில போதுகளில் கடலலைகள் ஓடிவந்து அப்பாவையை அழித்துக் கலைத்துவிடும்! அப்போது இளம்பெண்கள் கண்ணீர்விட்டு அழுவார்களாம்!

"அயிரார் திரைவந்துன் வண்டலம்பாவை அழித்தனவோ?
செயிராத அன்னை செயிர்த்தனளோ? செறிநாரை திண்போர்
வயிரா நரலும் வயல்தஞ்சை வாணன்தென் மாறையில்என்
உயிராகியதையல்! நீகலுழ் வான்என் உளம்குழைந்தே?"

(த. வா. கோவை: ௨௮௮)

இத்தகைய திறமையான சிறு கைத்தொழில்களிலும் கலை உணர்ச்சியும், கலைப்பண்பும் சிறந்து நின்றமையாலன்றோ கற்ற கவிஞர்களும் தம் கவினார் கவிதைகளில் அக் கலையருமையைப் பாராட்டிப் பாடுவாராயினர்!

ஓவியக்கலையின் சார்பினில் ஒன்றாகிய கட்டிடக் கலையைப் பற்றியும் பல அரிய குறிப்புக்களை புலவர் அளிக்கிறார். தஞ்சை வாணனின் மாளிகை வெண் மாளிகை எனக் கூறுகிறார். அக் காலத்தில் வெள்ளைப் பூச்சு மாளிகைகளுக்கு பூசினர் என்ற உண்மை இதில் புலப்படுகிறது.

“பரவாத வண்ணம் பரவியும், பாதம் பணிந்தும், நெஞ்சம்
கரவாத பொன்னை நின் காரணமாகக் கயிலை என்றே
வரஆதவன் அஞ்சும் வெண்மாளிகைத் தஞ்சைவாணன் வெற்பா!
இரவாத வண்ணமெல் லாம்இரந்தேன் இவ் விரவிடையே”
(த. வா. கோவை. ௧௭௨)

‘பளிங்காலாகிய வெள்ளிய மாளிகை’ எனவும் இதனைக் கருதற் கிடனுண்டு.

தஞ்சைவாணனின் கோட்டையில் கிடங்கும் புரிசையுமாகியக் கோட்டை உறுப்புக்கள் இருந்தமையைப் புலவர் குறிக் கிறார்.

“தொடங்கும் பிறைநுதல் தோகையும் நீயும்முன் தோன்றுகின்ற
கடங்குன் றிரண்டும் கடந்துசென் றால்கம லத்தடமும்
கிடங்கும் புரிசையும் சூழ்ந்தெதிர் தோன்றும் கிளைத்த பைந்தார்த்
தடங்குங் குமநெடுந் தோள்வாணன் மாறையும் தஞ்சையுமே.”
(த. வா. கோவை. ௩௨௧)

தஞ்சைவாணன் அரண்மனை பொன்னால் செய்யப்பட்ட மதிலை உடையது என்ற குறிப்பைக் கொடுக்கிறார்.

“வெஞ்சுர நாடு வியன்சுர லோகமும் வெங்கடுங்கான்
ஐஞ்சுர தாரு வனங்களும் ஆக, அகில் புகை போல்
மஞ்சுரா ஆடக மாமதில் சூழ்தஞ்சை வாணன் வெற்பில்
பஞ்சரம் ஆகும் மொழிச்சுருள் ஓதியென் பைந்தொடிக்கே.”
(த. வா. கோவை. ௩௩௫)

“இயங்கா வனம்என் மகள்ஒரு காளைபின் ஏகினள்! என்று
உயங்கா தொழி அஃதுலகியல்பால்; உலவும்புயல் தோய்
வயங்குஆடக மதில்சூழ் தஞ்சை வாணன் மணம்கமழ் தார்ப்
புயம் காதல் கொண்டுஅணைந்தாள் அயனார் தந்த பூமகளே.”
(த. வா. கோவை. ௩௪௨)

வாணன் ஊரில் கோபுரங்கள்மிக இருந்தனவாம்! அங்கே கொடிகள்பறந்தன! மாடமும் மதில்களும் ஒழுங்காக அமைக்கப் பட்டிருந்தனவாம்!

"கோபுரம் சோலை கொடிமதில் மாடம் துலாவிமையோர்
மாபுரம் போலும் தென்மாறை வரோதயன் வாணன்வெற்பில்
நீபுரந்தே தந்த மாதைஅங்கு யான் வரைநீர்மை பொன்செய்
நூபுரம் சூழ் அடியாய்! சென்று கூறு நுமர்தமக்கே."

(த. வா. கோவை. ௩௰அ)

இதுவரை கட்டிடங்கள் பற்றிய குறிப்புக்களைக் கண்டோம். அக் காலத்தில் செம்பை உருக்கி வார்த்துத் தகடு செய்யும் கொல்லரின் தொழிலை உவமையாக்குகிறார் பாலை வழிக்கு. கொல்லர்தம் தொழிலினை புலவர் கூர்ந்து நோக்கி எடுத்து ஆண்டுள்ள மாண்பினைக் காணுவோம்.

"தேர்த்தானை வாணன்தென் மாறைமின்னே! அஞ்சல்; செம்புருக்கி
வார்த்தால் அனைய வழிநெடும் பாலை மடப் பெடை நோய்
பார்த்தா தவம்தணி பாதவம் இன்மையின் பைஞ்சிறகால்
போர்த்தாலும் மஞ்ஞை கண்டும் போவ ரோகம் புரவலரே!"

(த. வா. கோவை. உகூஎ)

வேல் வடிப்பது அக் காலக் கொல்லரின் தலையாய கடமையாக இருந்தது. இத்தகை வடிக்கும் திறமையைப் பற்றிப் புறநானூற்றில் பொன்முடியாரும், "வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே' எனப் பாடியுள்ளார். அத்தகைய அருந் தொழிலால் பொய்யாமொழிப் புலவர் காலத்திலும் தமிழ்க் கொல்லர்கள் வேல் முதலிய படைகள் ஆக்கி யளித்துள்ளனர்!

"படிஒன்று சாலி அனையவர் சேரிப் படர் பவளக்
கொடிஒன்று நீலம் மலர்ந்தது காட்டக் கொடிய வெம்போர்
வடிஒன்று கூர் இலை வேல்வல்ல வாணன்தென் மாறையில்பொன்
தொடிஒன்று தோள்மட வார்சேரி வாய்வந்து தோன்றியதே."

(த. வா. கோவை. ௩அ௩)

அக் காலப் பொற்கொல்லர் நெருப்பில் பொன்னை உருக்கியும், காய்ச்சியும் பண்படுத்துவர். அத் தொழில் நலத்தைப் புலவர் அழகொழுகக் கூறுகிறார் ௩௭அ ஆம் பாட்டில்:

"வன்போ தணிதொங்கல் வாணன் தென்மாறை மகிழ்நர் நம்மேல்
அன்போடு நன்னெஞ் சறிவறை போக அழலுள் வெந்த
பொன்போல் நிறம்கொண்டு இரவும்கண் ணீரும் புலர்வதுபார்த்து
என்போல் எவர்இங்ங னேஇமை யாமல் இருப்பவரே?"

(த. வா. கோவை. ௩௭அ)

பொற்கொல்லர் பொன் அணிகலனில் பல்வகை மணிகளை, முத்துக்களைப் பதித்து அழகிய கலைத்திறமை காட்டி ஒப்பற்ற ஓவியக்கலை வியக்கும் படைப்புக்களை உருவாக்குவர். அத்தகைய திறமான தொழிலமைதியை ௬௨ ஆம் கோவைப் பாட்டில் பொய்யாமொழியார் புகல்கிறார்.

"என்னோடு நின்ற இளங்கொடியே! சங்கம் எய்ந்து குழாம்
தன்னோடு செல்லும் சலஞ்சலம் போல்தஞ்சை வாணன்வெற்பில்
பொன்னோடு செல்லும் புகழ்மணி போல்நின் புடை அகலா
மின்னோடு நுண்ணிடை யாருடன் நீ சென்று மேவுகவே."

(த. வா. கோவை. ௬௨)

பொன் அணிகலங்களை மென்மை செய்து பண்படுத்துதற்காகப் பொற்கொல்லர் அரம்கொண்டு அராவுவர். அப்போது மிக நுண்ணிய பொன் துகள் சிந்தும். இப் பொற்றூளைப் பெண்களின் முலைகளில் மஞ்சள் நிறமாகப் படரும் தேமலுக்கு (சுணங்கு) உவமையாக ஆள்கிறார் பொய்யாமொழியார் :

"நின்மேல் அடுத்த பசலையின் காரணம் நின் துணைவி
என்மேல் அடுத்த இயல்பின் அன்றோ பெற்றது எழ் உலகும்
தன்மேல் அடுத்த புகழ்த்தஞ்சை வாணன் தமிழ்க்கிரி நுனை
பொன்மேல் அடுத்தன பொன்சுணங் கீன்ற புணர்முலையே!"

(த. வா. கோவை. ௩௩௭)

அப்பொன் துகளை உதிர்க்குமாறு தொழில் செய்யும் கொல்லர் தொழிலுக்குரிய கருவியாகிய அரத்தைக் கல்லின் கூர்மைக்கு உவமையாகப் பயன்படுத்தியுள்ளார் புலவர் :

"வரமாமை வேல்படை வாணன்தென் மாறை வணங்கலர்கள்
புரமான வல்லழல் பொங்குவெங் கானில் பொருந்திய கூர்
அரமான கல் உன் அடிமலர் ஆற்றல ; ஆதலின், நாம்
சுரமாறும் எல்லை நல்லாய்! இருப் பாம் இந்தச் சோலையிலே."

(த. வா. கோவை. ௩௭௧)

கலைத்துறைத் தமிழ்ச்சொற்கள் பலவற்றை நந்தமிழ் மொழி புதையல்போலப் பதுக்கி வைத்துள்ளது. அவற்றுள் 1. வனைதல். 2. புனைதல்.

சிலை செய்வதில் மழமழப்பாக ஒழுங்காக மேட்டுப் பகுதி பள்ளப் பகுதிகளைத் திறமையாக உருவாக்குவதை 'வனைதல்' என்பர். அழகிய நுட்ப வேலைகளைச் செய்வதையும், நிறம் ஊட்டுதலையும் 'புனைதல்' என்பர். ஒரு பெண்ணின் முலை ஓவியக் கலைஞன் சிலைக்கு 'வனைந்து' ஆக்கியதுபோல அமைந்திருந்தது என அழகொழுகக் கூறுகிறார் புலவர். ஓவியக் கலைஞன் பல்வகை

எழில்மிகு நிறங்களால் புனைந்து அழகு ஊட்டியது போலிருக்கிறது புனம் என்கிறார் பொய்யாமொழியார்.

"வனைந்தால் அனகொங்கை மாதரு வாய்த்த தஞ்சைவாணன் வெற்பின்
புனைந்தால் அனைய புனத்து அயல்வாய் வண்டு போதகத்தேன்
நனைந்தால் அனையஎன் நல்வினை தான்வந்து நண்ணிற்றென்று
நினைந்தால் அணங்கனையாய்! தமியேன் உயிர் நிற்கின்றதே."

(த. வா. கோவை. அஎ)

வனைந்தது போன்ற கொங்கைக்கு உவமையாகச் 'செப்பேர் இளங்கொங்கை' என இன்னொரு இடத்தில் பொற்செப்பை உவமையாக்குகிறார் புலவர். பொற்கிண்ணம் செய்வர் தமிழ்ப் பொற்கொல்லர். அச் செப்பின் அமைப்பு முலையின் அமைப்பாகும். இவ்வரிய உவமையை தமிழ்ப் புலவர் ஓர் இலக்கிய மரபு உவமையாகவே உருவாக்கி விட்டனர்! எனின் அச் செப்பின் எழிலும் அதைச் செய்யும் பொற்கொல்லரின் நுண்கைத் தொழிற்றிறனும் இத்துணைத்து என எண்ணி உரைத்தற் கியலுமோ?

"இப்பேரு வகை இனிப்பிரியேன் என்றும், என்முன்சொன்ன
அப்பேருரை பழுதாம் என்னவோ அரவம்சுமந்த
மைப்பேர் அலைகடல் வையகம் தாங்கிய வாணன் தஞ்சைச்
செப்பேர் இளங்கொங்கை மங்கை! செப்பாதன்பர் சென்றதுவே."

(த. வா. கோவை: உகூச)

ஆடவர் காலில் அணியும் கழல் பொன்னால் செய்யப் பெறும். பொற்கொல்லர் அதில் பல நுண்ணிய புனைகொடிகளை உளிகள்கொண்டு வனைவர். அத்தகைய கழலை 'அம்பொன் வனை கழல்' எனக்குறிப்பார் பொய்யா மொழியார்.

"புனையலர் எதிலர் காதல்அம் தாயர் பொறாமை யின்போய்
இனை துயர் யாதொன் றும் இன் றிவெங்கான் இகந்து யானும் அம்பொன்
வனைகழ லானும் வருவதெல் லாம்சென்று வாணன் தஞ்சைத்
தனைவுடன் எகுகின்றீர்! சொல்லுவீர்என் துணைவியர்க்கே."

(த. வா. கோவை: கூடுக)

பெண்டிர் அக் காலத்தில் கழங்கு ஆடுவது இயல்பு. அக் கழங்கைப் பைம்பொன்னால் செய்து ஆடுவாம்! அக்கால வீட்டுப் பெண்டிர் விளையாடும் கழங்கே பொன்னால் செய்யப்பெற்ற தாயின் அவர்களின் வளமான செல்வவாழ்வு எத்தகையதாயிருக்கும் என்பதை நாம் கற்பனையால் அளவிடமுடிகிறதா? அக்காலப் பொற்கொல்லர் பொற்கழங்கு செய்ததோடு மட்டுமா அமைந்தார்கள்? மன்னர்கள் ஏறிச்செல்லும் பொன்தேரும்

செய்தளித்தார்கள்! அத்தகைய கலைவல்லுநர்களாக அவர்கள் விளங்கியிருந்த மாண்பைப் பொய்யாமொழியார் குறிக்கிறார்.

"தழங்கார் புனல்வையை சூழ்தஞ்சைவாணன் தனதருள்போல்
பழங்காதல் எண்ணல்என் பைதல்நெஞ்சே! இவள்பண்டு பைம்பொன்
கழங்கு ஆடிடமும் கடிமலர்க் காவும் கடந்துபுள்ளும்
வழங்கா வழிநமக் கோர்துணை யாய்வந்த மான்அல்லளே."

(த. வா. கோவை: ௬0௨)

இப்பாட்டில் கழங்காடுதற்கெனத் தனி இடம் ஒதுக்கி இருந்தமையை நாம் அறியலாம்.

"ஏமான் எனஅஞ்சும் என்காத் தலின்,அவ் விரவிபொன்தேர்
வாமானின் வாழ்வன வாகபன்னாள்; தஞ்சை வாணன் ஒன்னார்
போமான் அதர் இடத்து என்னையர் தோன்றப் புறங்கொடுத்த
கோமான் மணிநெடுந் தேர்நுகம் பூண்ட குரகதமே."

(த. வா. கோவை. ௩௬௫)

"நனையகத்து அல்கிய நாள்மலர் ஓதி நயந்துஉறையும்
மனையகத்து அல்லிடை வைகுத லால், தஞ்சை வாணன் ஒன்னார்
வினையகத்து அல்குதல் செல்லுவ ரேனும், அவ்வேந்தர் பொன்தேர்
முனையகத்து அல்கல்செல் லாது ஒருநாளும் முகிழ்நகையே!"

(த. வா. கோவை: ௩௭௬)

போருக்குச் செல்லும்போதே பொற்றேரில் செல்கின்றார்கள் நம்நாட்டு மன்னர்கள் எனின் நம் தாயகத்துப் பொன்வளமை எத்துணை சீரியது என்பதை எடுத்துரைக்காமலே அறியமுடியும்!

'வடிவம்' என்பது 'வடிக்கப்பெற்ற உருவம்' எனும் பொருள்படும். வடித்தல் எனின் செய்தல் ஆக்குதல் என்று பொருள். சிலைகளை வடித்து ஆக்குதலால் அவை வடிவம் எனப்பட்டது. இக்கலைச்சொல் வழக்காற்றில் பொருள் மாறுபட்டு வழங்கிவருதலால் அதன் மெய்ப்பொருளை அறிதல்வேண்டி இக் குறிப்பு விளக்கப்பட்டது. கற்பே ஒருவடிவம் எடுத்து வந்தது போன்ற ஒருபெண்ணைப் புலவர் ௬0௭ ஆம் பாட்டில் குறிக்கிறார்.

"சிறந்தார் புகழ்தரும் தீம்புனல் ஊரன் செய்தீமை எல்லாம்
மறந்தார் வம்எய்தி வணங்குதலால் இவள்வாணன் தஞ்சை
நிறந்தாரகை அன்னதித்திலம் போலும் நெடுங்குலத்தில்
பிறந்தார் நிறைந்த கற்பு ஓர்வடிவே பெற்ற பெற்றியளே."

(த. வா. கோவை: ௬0௭)

பொய்யாமொழிப் புலவர் காலத்தில் ஒளிமிக்க கண்ணாடியினுள் பாவை அமைக்கும் வழக்கம் இருந்தது. ஓவியக்கலையின்

ஓர் அரியதிறன் அமைந்த தொழிலை இப்பாட்டின் வழி புலவர் வெளியிடுகிறார். ஒளிமிக்க கண்ணாடியுள் அமைக்கப்பட்ட சிலை போன்ற அழகுள்ள பெண் என்கிறார் புலவர்:

"மலர்புரை ஏர்கொண்ட வாள்கண் எம்கோமங்கை, வாணன் தஞ்சை
பலர்புகழ் பாலன் பயந்து நெய்ஆடினள்; பாங்கெவர்க்கும்
அலர்புரை நீடொளி ஆடியுள் பாவை அன்றோட்தளநீர்
புலர்புனல் ஊர! என்னோ திருவுள்ளம் இப்போதுனக்கே!"

(த. வா. கோவை: ௩௮௧)

(மேற்பாடலில் கருவுற்ற மங்கையர் பிள்ளைபயந்து நெய் குளித்து முழுகுதலைக் குறிக்கிறார். 'மூழ்காமல் இருக்கிறேன்' எனப் பிள்ளைத்தாய்ச்சியர் கூறுவதும், குழந்தைப் பேறு முடிந்ததும் 'குளிகுளித்தேன்' என்பதுமாய சொல்லாட்சிகள் மேற்கூறிய 'நெய்ஆடுதல்' என்பதன் வழித்தோன்றியன என்பது குறிப்பிடத்தக்கது.)

தமிழ்ப் புலவர்கள் காவியத்தையும் ஓவியத்தையும் ஒரே தகுதியில் வைத்துப் போற்றிய வாய்மையை அவர்களின் இலக்கியப் படைப்புகளே நிலைநாட்டுகின்றன. அவ்வுண்மையையே பொய்யாமொழிப் புலவரின் தஞ்சைவாணன் கோவை நூலும் நிலைநாட்டக் கண்டோம்.

கலைவளம் சிறந்த தமிழகம், தன் பழம்பெருமையை மீண்டும் ஒருமுறை புதுக்கண்ணோட்டத்தில் ஆராய்ந்துநோக்கிப் பழைய வளமார்ந்த வாழ்வையும, மேதைமையையும் உணர்ந்து கொண்டால், மீண்டும் புதுமைத் தமிழகத்தில் கலைச்சிறப்பை நிலைநாட்ட முடியும்! கலைத்துறை மறுமலர்ச்சியடையப் பழைய கலைவரலாற்று உண்மையை நேரிய கண்களால் ஆராய்ந்து உணர வேண்டும். கலைநூல் மலிந்திருந்தது இந்நாட்டில் ஒரு காலத்தில்; இன்றோ அவை அருகிவிட்டன. அக்குறையை நீக்க, இலக்கியத்தில் ஓவியக்கலை பெறும் இடம் இத்தகையது என ஆராய்ந்து வெளியிடவேண்டிய இன்றியமையாமை உண்டாகிவிட்டது.

'செல்வி' கட்டுரையாளர்கட்கு

செந்தமிழ்ச்செல்வி திங்கள் வெளியீடாகவும் அளவில் சிறியதாகவு மிருத்தலானும், சில இன்றியமையாக் கட்டுரைகட்கு மட்டுமே முதன்மை தரவேண்டியிருப்பதாலும், இனிக் கட்டுரை அனுப்பும் அன்பர்கள் தொடர் கட்டுரைகளையோ, மிக நீண்ட கட்டுரைகளையோ அனுப்பாமல், ஒரே இதழில் நான்கு பக்கங்களுக்குள் முடியும் அளவில் கட்டுரைகளை அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம்.

ஆசிரியர்.

தீப நாடகங்கள்

[திரு. பா. பச்சையப்பன்]

(செல்வி, சிலம்பு ௩௪ - பரல் - ௭, ௩௩௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒதிபன்: ஆ! என் தந்தையல்லவா?

செய்திசொல்லி: நான் எவ்வாறு தங்கள் தந்தையல்லனோ அவ்வாறேதான்.

ஒதிபன்: தங்களைப்போன்றா? விளக்கிச் சொல்லுங்கள்.

செய்திசொல்லி: நான் உங்களுக்குத் தந்தையல்ல. பொலிபரும் தங்களுக்குத் தந்தையல்ல.

ஒதிபன்: அங்ஙனமாயின், அவருடைய மகன் என்பது எப்படியாயிற்று?

செய்திசொல்லி: சொல்லுகிறேன் கேளுங்கள். நான் அவருக்கு உங்களைக் கொடுத்தேன்.

ஒதிபன்: கொடுக்கப் பெற்றவனா? அங்ஙனமிருந்தும் என்னை மகன்போல் அன்புடன் காப்பாற்றினரே?

செய்திசொல்லி: அவருக்கு மக்கட்பேறில்லை.

ஒதிபன்: நான் கண்டெடுக்கப் பெற்றேனே அன்றி யாராலேனும் கொடுக்கப் பெற்றவனா?

செய்திசொல்லி: சிதேரணத்துக் காட்டுப் புதரில் கண்டெடுக்கப் பெற்றவராவீர்.

ஒதிபன்: அங்கு ஏன் சென்றீர்கள்?

செய்திசொல்லி: மலையின் மீது ஆடு மேய்த்துக் கொண்டிருந்தேன்.

ஒதிபன்: தாங்கள் எடுத்துக் கொண்டபோது எவ்வாறு இருந்தேன்?

செய்திசொல்லி: உங்கள் காலில் இருக்கும் குழி வரலாற்றைச் சொல்லுமே!

ஒதிபன்: என் கால்களைப்பற்றியா? அந்த நோயினைச் சொல்ல வேண்டுமா?

செய்திசொல்லி: நான் பார்க்கும்போது கால்கள் விலங்கிட்டிருந்தன. வெட்டி விலக்கினேன்.

ஒதிபன்: உண்மைதான். தொட்டில் முதற்கொண்டு அப்புண் இருந்து வருகிறது.

செய்திசொல்லி: அதனாலன்றோ தங்களுக்கு ஒதிபர் என்ற பெயரும் வந்தது?

ஒதிபன்: ஆ, தெய்வமே! இது என் தாயிட்ட கொடுமையோ, தந்தை செய்த தீங்கோ!

செய்திசொல்லி: அஃது என்னால் சொல்ல இயலாதது. எனக்குக் கொடுத்தவனைக் கேட்கவேண்டும்.

ஒதிபன்: உனக்குக் கொடுத்தானா? யார்? நீயே கண்டெடுக்கவில்லையா?

செய்திசொல்லி: வேறு ஒரு இடையன்தான் உங்களை என்னிட கொடுத்தவன்.

ஒதிபன்: அவன் யார்?

செய்திசொல்லி: இலேயரின் ஆட்களுள் ஒருவன் என்று நினைக்கிறேன்.

ஒதிபன்: இலேயர்? நம் முன்னாள் அரசர்.

செய்திசொல்லி: ஏன், அவரேதான். எனக்குக் கொடுத்தவன் அவருடைய கையாள்தான்.

ஒதிபன்: அவன் இப்போது உயிரோடு இருக்கிறானா. நான் பார்க்கலாமா?

செய்திசொல்லி: உங்கள் நாட்டினருக்குத்தான் அவன் இருப்பிடம் தெரியவேண்டும்.

ஒதிபன்: நல்லீர், உங்கள் யாருக்கேனும் அவன் இருப்பிடம் தெரியுமா? தெரிந்தால் சொல்லுங்கள். இதுதான் அம்மறையினை அறிந்துகொள்ளுதற் கேற்ற சமயம்.

கோரஸ்: தாங்கள் அறிய விரும்பியவன் அவனே. அரசியாருக்கு அவன் எங்குள்ளான் என்று தெரிந்திருக்க வேண்டும்.

ஒதிபன்: அன்பே, நீ வரச்சொல்லியவன் அவன்தானோ?

யோகத்தாள்: (அச்சமுற்றவளாய்) அவன் யாராயினென்ன? இவர் சொல்வதை மறந்துவிடுங்கள்.

ஓதிபன்: இச் சூழ்ச்சியினை முடிவுவரையில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

யோகத்தாள்: வேண்டாம். தெய்வத்தின் பேரால் சொல்கிறேன். உயிர் வாழவேண்டுமாயின் இதுபற்றி அறிய வேண்டாம். யான் துன்பமுற்றது போதும்.

ஓதிபன்: அஞ்சுதற்கொன்றுமில்லை. யான் அடிமைக்குப் பிறந்தவனாயினும், உன் பெருமைக்குக் குறைவு நேராது.

யோகத்தாள்: ஆராயாதீர்கள். இறைஞ்சுகிறேன்.

ஓதிபன்: தெரிந்துகொள்ளவே விரும்புகிறேன். முடிவு தெரியும் வரையில் ஆராய்வேன்.

யோகத்தாள்: நான் சொல்வதுதான் சரி என்கிறேன். உங்கள் நன்மைக்குத்தான் சொல்கிறேன்.

ஓதிபன்: என் நன்மை எனக்குக் கொலையாளாக நிற்கிறது.

யோகத்தாள்: பழிக்காளாகுபவரே, உண்மை அறிதற்கு உயிருடனிருக்காதீர்.

ஓதிபன்: யாரேனும் சென்று அவனை அழைத்து வாருங்கள். இவ்வரசி தன் குலப் பெருமையில் இன்பங் கொள்ளட்டும்.

யோகத்தாள்: இதுவே என் இறுதிச் சொல். இழந்தீர் ; இழிக்கப் பெற்றீர்!

[செல்கிறாள்]

கோரஸ்: அரசி நம்மைவிட்டு வெகுண்டு எழுந்து செல்லுதற்குக் காரணம் என்னவோ? அவர் சொன்னதை நோக்குமிடத்துத் தாம் சொல்வதற்கு அஞ்சுமாறு ஏதோ பெருந்தீங்கு நேரவிருக்கிறது என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

ஓதிபன்: அது எதுவாயினும் ஆகுக. உண்மை வெளியாகுக! என் பிறப்பின் மறைபொருளை வெளிப்படுத்த வேண்டுகிறேன். யான் அரச குலத்தவன் அல்லன் என்று அரசி அஞ்சுகிறாள். நல்வினையின் பிள்ளையாக வளர்ந்தேன். யான் வெட்கப் படுதற்கொன்றும் இல்லை. நல்வினை என் தாய். பருவகாலங்கள் என் உடன் பிறந்தவர்கள். என் நல் வாழ்வும், வீழ்வும் அவர்களைப்போல் மேற் செல்வனவே. யான் பிறந்ததெப்படி என்பதை அறியவே முற்படுகிறேன்.

(தொடரும்)

கவுந்தியடிகள்

[திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ.,]

(செல்வி சிலம்பு ௩௪, பரல் ௭, ௩௨௬ ஆம் பக்கத் தொடர்ச்சி)

துன்பத்தால் பெருந்துயரடையும்போது, நம்மைவிடப் பெருந்துன்பமடைந்தோரைப் பற்றி அறிவோமாயின், நம் துன்பம் ஒரு துன்பமாகாது என்ற உள்ளத் தெளிவும், நம்மைவிட இன்னல்பல அனுபவிப்போர் இவ்வுலகிலுண்டு என்பது கண்டு உள அமைதியும் ஆறுதலும் அடைகின்றோம். இது உள நூல் கூறும் உண்மையாகும்.

இவ்வுள நூல் உண்மையை உணர்ந்தார் போலும் கவுந்தியடிகளும்! எனவே தனித்துயரெய்திய கோவலன் துன்பத்தின் சிறுமையையும் பிறர் துன்பத்தின் பெருக்கையும் அறியச் செய்து, துன்பத்திலும் துணைவியைத் துணையாகத் தான் பெற்றுள்ளதையும் கதை வாயிலாகக் கோவலனையும் காப்பிய வாயிலாக நம்மையும் ஆறுதலுறச் செய்யும் கவுந்தியின் திறம் வியந்து செய மறந்து பாராட்டற்பாலது.

குன்றாக் கொள்கைக் கோவலன் தான் நனவுபோல நள்ளிருள் யாமத்தே கண்ட கனவைக் கூறி, கடிதீக்குறுமெனக் கழறிக் கலங்கிய ஞான்று, ஏற்ற விடையோ எளிய மாற்றமோ கூறாது வேறு கூறுவது அறமுதல்வியின் அறிவு ஒட்பத்தை (Presence of mind) நன்கு காட்டுகின்றது. கனவு கண்டு கலங்கும் கோவலனுக்கு உடனே 'ஐயோ, கண்ட கனவு பொல்லாததாயிற்றே! என்னென்ன நடக்கப் போகிறதோ' என்றெல்லாம் எடுத்துக் கூறி இன்னலடையச் செய்யாது சர்வசாதாரணமாகச் (as a matter of fact) செயலாற்றும் மாதவத்தாட்டியின் மாண்பே மாண்பு! இங்ஙனம் மாற்றம் உரைக்காது மனதைத் திருப்பியமையால் கோவலனும் அதனை மறந்து விடுவான், அங்ஙனம் மறக்காவிடினும் கனவொன்றும் அங்ஙனம் தீமையுடையதாகாது என்ற எண்ணமும் தோன்றக் கூடுமன்றோ?

இன்னும், இடைக்குல மூதாட்டியாம் மாதரியிடத்துக் கண்ணகியை அடைக்கலப் படுத்துமிடத்துக் கூறுவன கவுந்தியடிகளின் எடுத்தோதும் திறத்தையும் எண்ணியது உணர்த்தும் இனிமையையும் காட்டுகின்றன.

"மங்கல மடந்தையை நன்னீ ராட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் தீட்டித்
தேமென் கூந்தற் சின்மலர் பெய்து

தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமுங் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே யாகித் தாங்கு.'' (அடைக். ௧௩௧-௩௬)

எனக் கண்ணகியை ஏற்றிப் போற்றுமாறு இது எனக் குறிப்பாக வும்,

''மாதரி கேள்இம் மடந்தைதன் கணவன்
தாதையைக் கேட்கில் தன்குல வாணர்
அரும்பொருள் பெறுநரின் விருந்தெதிர் கொண்டு
கருந்தடங் கண்ணியொடு கடிமனைப் படுத்துவர்.''
(அடைக். ௧௨௫-௨௮)

என, அடைக்கலப்பொருள்தானே எனக் குறைவாக எண்ணி விடக்கூடாத வண்ணம் செந்தமிழ்ப் பாவையின் சிறப்பையும்,

''என்னொடு போந்த விளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்.'' (அடைக். ௧௩௭-௩௮)

''தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்துணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்.'' (அடைக். ௧௪௧-௪௪)

எனக் கண்ணகியின் கற்பின் திறத்தையும், அடைக்கலம் பேணு மாற்றான் வரும் அரும்பயனை,

'' தவத்தோர் அடைக்கலம் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பந் தருமது கேளாய்.'' (அடைக். ௧௪௯-௫0)

என விளித்துக் கதையொன்று கூறி விளங்க வைத்த கவுந்தியின் நாநலம் பாராட்டற்பாலது.

கருந்தடங் கண்ணியும் கவுந்தியடிகளும்

இங்ஙனம் நாநலனும், அறிவு ஒட்பமும், குற்றம் கண்டவழி மனம் பொறாத மாண்பும், தவவலியும் மிக்க மாதவத்தாட்டி உலகிற்கோங்கிய ஒருமாமணியாம் திருமாமணி - கண்ணகியைச் சிறப்பித்துக் கூறுகின்றார்:

''கற்புக்கடம் பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்.'' (அடைக். ௧௪௩-௪௪)

என ஏத்தும்போது பத்தினிப் பெண்ணின் பெருமையை யுணர் கின்றோம்.

" வானம் பொய்யாது, வளம்பிழைப் பறியாது,
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது,
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு." (அடைக். ௧௯௰-௧௯௨)

எனப் பின்னரும் பத்தினிப் பெண்டிரால் வரும் சீரும் சிறப்பையும் கூறி நிறுத்துமாற்றுன் செந்தமிழ்ச் செல்வியின் சீர்சால் சிறப்பைச் சிந்தனைக்கு விட்டுவிடுகின்றுர். " கவுந்தி கண்ணகிக்குத் தந்த சிறப்புரை (Tribtue) கவனிக்கற்பாலது.

புண்ணிய முதல்வியின் பண்பு

அறமுதல்வி அடைக்கலக் காதையோடு நம்மை விட்டு நாமறியாதே நழுவி விடுகின்றுர். கோவலன் கொலையுண்ட பின்னரே - நீர்ப்படைக் காதையில் மாடலன் வாயிலாக ஆசிரியர்,

" தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்றம்
நிவந்தோங்கு செங்கோல் நீள்நில வேந்தன்
போகுயிர் தாங்கப் பொறைசா லாட்டி
என்னோ டிவர்வினை யுருத்த தோவென
உண்ணு நோன்போடு உயிர்பதிப் பெயர்த்ததும்."
(நீர்ப்படைக். ௭௧-௮௩)

எனக் கூறியவாற்றுல் அறிகிறோம். கண்ணகிபால் பேரன்பும் பெருமதிப்பும் கொண்ட கவுந்தியடிகள் கோவலனுக்குற்றது அறிந்து பாண்டியன்பால் பெருஞ்சீற்றம் கொண்டார்; ஆனல் பாண்டி மன்னன் உயிரை உடனே விட்டான் என்றதும் இரக்கத்தால் இவரது சினம் தென்னவனைச் சபியாது தணிந்தது. இருப்பினும் 'என்னோடு இவர் வினை உருத்ததோ' என எண்ணி உண்ணு நோன்பிருந்து உயிர் துறந்தார் எனும்போது விம்மிதமும் வியப்பும் எய்துகின்றோம். என்னே! கண்ணகி கோவலர்பால் இவர் கொண்ட ஈடுபாடும் இலைந்த உள்ளமும்.

இதுகாறும் கண்டவற்றுல் உயர்ந்த உள்ளமும், உயரிய நோக்கும், இரக்க வுணர்வும், தவவலிமையும் மிக்கவர் கவுந்தியடிகள்; அடக்கமும் ஆன்றவிந்தடங்கிய கொள்கையும் உடையவர்; சமயப்பற்று மிக்கவர்; அன்புரிமையும் அருளுறவும் அமையப் பெற்றவர்; எண்ணித் துணியும் இயல்பினர்; அறிவு ஒட்பமும் ஆன்ற புலமைத்திறமும் உடையவர்; கோவலன் கண்ணகி இருவர்பால் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டவர்; கண்ணகி துயர் பொறுது உயிர் துறந்த உயரிய நட்புத்திறம் நன்கமையப் பெற்றவர் என்றும் கண்டோம்.

கவுந்தியின் செயல்திறம்

மாதவத்தாட்டியின் மாண்பு கண்டோம்; இனி இவர்பற்றிய வேறுபட்ட கருத்துக்களின் விளக்கம் காண்போம்.

கதையா? கற்பனையா?

கவுந்தியடிகள் இன்றியே காப்பியம் இனிது நடைபெறும். கவுந்தியின் துணையின்றியே கோவலன் கண்ணகி இருவரும் மதுரைக்குச் செல்லவும் கூடும். அன்றியும் கண்ணகி கதையோடு இணைக்கப்பட்டிருக்கும் மாதவியின் கதைபோன்ற இன்றியமையாமையோ, வீரபத்தினிக்கு ஏற்றம் தரும் வஞ்சிக்காண்டம் போன்றோ கவுந்தியின் கதை அமையவில்லை. இங்ஙனம் இன்றியமையாமை ஏதுமில்லாதபோழ்து கவுந்தியைக் காப்பியத்தில் அமைப்பானேன்? இது சிக்கல் தரும், சிந்தனையைத் தூண்டும் கேள்வியாகும்.

இதுபற்றிய பலவாறாய கொள்கைகள் உண்டு: கண்ணகி கோவலர்க்கிடையே உண்டான ஊடல் தீர்க்கும் உறுப்பாக அமைபவர் கவுந்தி அடிகள் என்று சிலரும், தம் சமயம் பற்றிய (சமணப்) பிரசாரம் புரியவே புண்ணிய முதல்வியைத் தோற்றுவித்துள்ளார் இளங்கோ என்று சிலரும், கயமலர்க் கண்ணிக்கும் காதற் கொழுநனுக்கும் வழித்துணையாக அமைந்தவரே கவுந்தியடிகள் என்று பலரும், பத்தினியை ஏத்துதல் என்னும் இனிய நோக்கு எளிதே நடைபெற இத் தவமூதாட்டியைக் காப்பியத்தில் நுழைத்துள்ளார் காப்பிய ஆசிரியர் என வேறு சிலரும் கூறுவர். ஒரு சாரார் கவுந்தியடிகள் வெறுங் கட்டுக்கதை; கற்பனைப் படைப்பு என்றும் பேசி மகிழ்வர்.

இக் கருத்துக்கள் ஒவ்வொன்றும் உண்மையுடையதும் இல்லை; இக் கொள்கைகள் அனைத்திலும் உண்மை இல்லாமலும் இல்லை. இனி இக் கருத்துக்களை ஆராய்வாம்:

ஊடல்தீர்க்கும் உறுப்பா?

மாமலர் நெடுங்கண் மாதவிபால் விடுதலறியா விருப்புற்று வடுநீங்கு சிறப்பின் தன் மனையகம் மறந்தான் கோவலன்; கணவனைப் பிரிந்த கற்பின் செல்வியும் அல்லலுற்று ஆற்றாது அலமந்து இருந்தாள். சலம்புணர் கொள்கைச் சலதியோடாடிப் பல்லாண்டுகட்குப் பின்னர் மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் என எண்ணி மாதவியைப் பிரிந்து கண்ணகியை வந்தணைந்தான் கோவலன். வந்ததும் மதுரைக்குப் புறப்படுகின்றனர். இந் நிலையில் இருவரிடத்தும் அமைந்த மனக்கசப்பும், உள்ளக் குமுறலும் ஒழிந்து ஒன்றுபடு மாற்றாற் கவுந்தி அமைகின்றார் என்பது ஒரு சிலர் கருத்து. ஆனால் இஃது அத்துணைச் சிறப்புடைக் கருத்தாகாது; ஏனெனில் இளமை தவழும் இருவரும் மதுரை சென்றடையும்வரை மனம்விட்டுப் பேசியதாகவே தெரியவில்லை. பேசுமாறு இத் தவச்செல்வி செய்ததாகவும் அறியோம்.

சொல்லப்போனால் கவுந்தி - அதிலும் ஒரு தவமூதாட்டி உடன் வருவதால் உளம் விட்டுப் பேசித் தத்தம் துயரினைப் போக்க அவர்கட்கு இயலாது போயிற்று. கவுந்தி அவர்கட்கு இடையூறாக அமைந்தார் என்றாலும் மிகையாகாது. அதுதான் பேசவே இடம் தரவில்லையே இக்கிழவி! கவுந்தியடிகள் தங்களுடன் இருக்கும் வரை இருவரும் தத்தம் உள்ளக்கிடக்கையை வெளியிடவே இல்லை. கவுந்தியைப் பிரிந்து மாதரியின் வீட்டில் இருந்தபோது தான் மனந்திறந்து பேசித் தத்தம் துயரத்தைப் போக்கிக் கொள்கின்றனர். இதனைக் கொலைக்களக் காதை ருச-கூஅஆம் அடிகளால் நன்கறியலாம். எனவே ஊடல் தீர்க்கும் உறுப்பாக அமைந்தார் கவுந்தி என்பது எவ்வாற்றானும் ஒவ்வாததாகும்.

இலைமறை காய்போல்

இனிக், கோவலன் கண்ணகியர்க்கு வழித்துணையாக வந்தவ[ள்] கவுந்தியையை என்பது ஏற்புடைய ஒன்றா? வழித்துணைக்[கு] இத் தவக்கிழவிதானா வரவேண்டும்? வேறுயாரும் வரக்கூடாத[ா?] வழித்துணை இன்றியே இவ்விருவரும் மதுரைக்குச் சென்றிருக்[க] முடியாதா? முடியும். பின்னர் ஏன் இப்புண்ணிய முதல்வியை இங்கே புகுத்தல் வேண்டும்? இங்கேதான் இளங்கோவின் எண்ணம் இலைமறை காய் போல் இலங்கக் காண்கின்றோம். செந்தமிழ்ச் சிலம்பின் சீர்சால் நோக்கே பத்தினியைப் பாரோர் ஏத்தச் செய்வ தன்றோ? அம்முறையிலே கண்ணகியின் பெற்றியை யுணர்த்தக் கவுந்தியை அமைத்தார். அத்துடன் சமய உண்மை உணர்த்தும் ஓர் அரிய வாய்ப்பையும் அவருக்கு அளித்துள்ளார் அடிகள். வழித்துணை என்ற ஒரே கல்லைக்கொண்டு செந்தமிழ்ப் பாவையைச் சிறப்பித்தல், சமண சமய உண்மையை உணர்தல் என்னும் இரண்டு மாங்காய்களை அடித்துவிடுகின்றார் அடிகள். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! எப்படி இளங்கோவின் செப்படி வித்தை?

சமயப் பிரசாரகரா ?

சோழனையும் சோணாட்டையும் புகழப் புகார்க் காண்டத்தையும், பாண்டியனையும் பாண்டிநாட்டையும் பரவ மதுரைக் காண்டத்தையும் பயன் படுத்தியமை போன்றே தன் நாடாம் சேரநாட்டையும் சேரமன்னனையும் ஏற்றிப்போற்ற இறுதிக் காண்டமாம் வஞ்சிக்காண்டத்தை வரைந்தாரன்றோ? அது போன்றே ஏனைச் சமயங்களைப் பற்றிப் பேச மாங்காட்டு மறையோன், மாடலன், தேவந்தி, மாதரி ஆகியோரை அமைத்தமை போன்றே, தம் சமயமாம் சமண சமயத்தை ஏத்துமாறு இக் கவுந்தியடிகளை அமைத்துள்ளார் ஆசிரியர் என்றால் அஃது எத்துணையும் மிகையாகாது.

அஃதாவது சேரநாட்டையும் செங்குட்டுவனையும் சிறப்பிக்குமாற்றான் வஞ்சிக்காண்டத்தை இளங்கோ எழுதியமைபோன்றே, சமண சமயக் கொள்கைகளைக் காட்டுமாற்றாற் கவுந்தியைக் கற்பித்துள்ளார் காப்பிய ஆசிரியர் என்பது துணிபு. சிலம்பிற்குத் தேவையில்லாத சாரணரைச் சந்திக்க வைத்து, அன்னவர் தம் தலைவனைக் கொண்டு ஊழ்வினையின் ஆற்றலையும், அருகதேவன் அருமையினையும் அழகுபட மொழியச் செய்து அம்மொழிகேட்ட கவுந்தியடிகள் அருகனையன்றி வேறு தெய்வத்தை வணங்குவதில்லை எனக் கூறுமாறும் செய்த இளங்கோவின் செயல் சமயப் பிரசாரமன்றி வேறென்ன? இதுபோது மாடலனை மறுத்துக் கவுந்தி கூறிய கருத்தினையும் எண்ணிப்பார்க்க:

"அங்கம் பயந்தோன் அருகன் அருண்முனி
பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
ஓதிய வேதத்து ஒளியுறின் அல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரெனச்."

(நாடுகாண். ௧௮௭-௧௯௧)

சாரணர் கூறுவதெல்லாம் காப்பிய ஆசிரியர் கருத்தன்றி வேறு எதுவாகும்? வேண்டுமானால் சிலம்பாசிரியர் தம் சமயத்தை விளம்பரப்படுத்த வேண்டுமென்று இங்ஙனம் செய்யவில்லை; அவரையும் அறியாது அவரது உள்ளக்கிடக்கை உருவெடுத்துளது என்று கூறலாமே தவிரக் கவுந்தியடிகள் சமயப் பிரசாரகர் அன்று என்று எங்ஙனம் கூற இயலும்? (He cannot but reveal himself)

எத்துணைதான் கலைஞன் காலத்தையும் இடத்தையும் கடந்தவனாயினும் அவனும் மனிதன்தானே! அவன் தான் கண்ட-காணவிழைந்த வாழ்வை ஏட்டிலே தீட்டும்போது அவனையுமறியாது - அவனே வேண்டாமென விழைந்தாலும், அவனையும் மீறி அவன் கொண்ட கருத்துக்கள் வெளிப்படுவது இயல்பு. இஃது இலக்கியக் கலைஞர் எவரும் ஒப்புக்கொள்ளும் ஒன்றாகும். அம்முறையில் இளங்கோவடிகள் தம் சமயக்கருத்தை - உள்ளக் கிடக்கையை உணர்த்தவே கவுந்தியைப் படைத்தார் என்று எண்ணுவது தவறன்று; அங்ஙனம் படைத்ததும் தீதுமன்று. வள்ளுவர்போன்று சமயப் பொது நோக்கு உடைய அடிகள் ஏனைச் சமயத்தை எடுத்தியம்பியமை போன்றே தம் சமயத்தை தையும் சிறப்பித்தது ஏற்புடைத்து; இனிமையுடைத்து.

(தொடரும்)

நக்கீரர்

[திரு. சோ. ந. கந்தசாமி, பி. ஏ. (ஆனர்சு)]

(செல்வி சிலம்பு, ௩௪, பரல் ௫, உ௩உ ஆம் பக்கத்தொடர்ச்சி)

இனி, கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் நக்கீரர் ஒருவர் வாழ்ந்தார் என்றும், அவர் இறையனார் களவியலுரை, அடிநூல், நாலடியார் ஆகிய மூன்று நூல்களையும் யாத்தார் என்றும் பிள்ளை அவர்கள் விள்ளுகின்றார். பாண்டிக்கோவைப் பாக்கள் களவியல் உரையில் வருதலான், கோவைத் தலைவன் நெடுமாறனின் காலமாகிய கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் இவ்வுரை எழுதப்பெற்றது என்று இயம்புகின்றார். தம் " திருவள்ளுவர் காலம்" என்னும் கட்டுரையில் களவியல் உரை கண்டவர் நக்கீரர் என்றும், "குறுந்தொகை" கட்டுரையில் களவியல் உரை வகுத்தவர் கி. பி. 5 ஆம் நூற்றாண்டினர் என்றும் பிள்ளை அவர்களே குறித்துள்ளார். அக் கட்டுரையிலேயே களவியலுரை எழுத்து வடிவு எய்தியது கி. பி. 7 ஆம் நூற்றாண்டாகும் என்று இயம்பியுள்ளார். களவியலுரைகாரர் நக்கீரர் என்பது பேரறிஞர் பலர்க்கும் ஒப்ப முடிந்த கருத்தாகும். ஆயின், அதனை 7 ஆம் நூற்றாண்டில் வரி வடிவிற் கண்டவர் பிறிதொரு நக்கீரர் என்னற்குச் சான்றுகள் உளவா? அதனை வரிவடிவாக்கியவன் சாத்தானுதல் காத்தானுதல் வேண்டும் என்பார் கூற்றிற்கும் இவர் தம் உரைக்கும் வேற்றுமையில்லை. எனவே, நக்கீரர் கண்ட களவியலுரை பல தலைமுறைகளாகப் பாடம் ஓதப்பெற்று, எழுதாக் கிளவியாக இருந்து, இடைச் செருகல் மலியப்பெற்று, ஏழாம் நூற்றாண்டில் யாரோ ஓரறிஞரால் எழுத்து வடிவு எய்தியது என்பது அறிவிற்குப் பொருந்துமாறுளது.

இனி, நாலடியாரைப் பாடியவர் நக்கீரர் என்றும், அவர் கி. பி. 7 ஆம் நூற்றாண்டினர் என்றும் பிள்ளையவர்கள் பேசுகிறார். நக்கீரர்க்கும் நாலடியார்க்கும் யாங்ஙனம் தொடர்பு வாய்த்தது என்பதை எண்ணிப் பார்ப்போம். யாப்பருங்கல விருத்தியில், "நக்கீரர் நாலடி நானூற்று வண்ணம்" என்ற தொடர் காணப்பெறும். "அளவினுற் பெயர் பெற்றன பன்னிரு படலம், நாலடி நானூறு" என்று மயிலைநாதர் உரையில் வரும் நாலடி நானூறும் மேற்குறித்த நாலடி நானூற்று வண்ணமும் ஒரே நூலாகும் என்று முடிபு செய்தற்குப் பிள்ளை அவர்கள் ஒரு காரணமும் காட்டினாரல்லர். நக்கீரர் நாலடி நானூற்று வண்ணமும் நாலடி நானூறும் வெவ்வேறாகக் கருதற்கு உரியன

என்பதை இவற்றின் பெயர் வேற்றுமையே புலப்படுத்துதல் காண்க. அன்றியும், இவ்விரு நூல்களில் ஒன்றினின்றும் பிறி தொன்றை வேறுபடுத்துக் காட்டவே முன்னதை ஆசிரியர் பெயருடன் சார்த்திப் பேசினராதல் வேண்டும். முன்னதைக் கொன்ளேயும் பின்னதை ஆசிரியர் பெயருடன் புணர்த்தும் வழங்குதல் ஆகாதோவென்னில் ஆற்றன்று : அந் நாலடி நானூற் றின் ஆசிரியர் பலராகலானும், அவர்தம் பெயர் அறியுமாறின்மை யானும்; "சில முனிவர் இருந்து தெரிந்துரைத்த, நாலடி நானூறு" என்று உரையாசிரியர் தருமர் உரைத்தமையானும்; நாலடி உரையாசிரியருள் ஒருவரேனும் நக்கீரர் நாலடியைப் பாடியதாகப் பகராமையானும்; இந்நூல் பலராற் பாடப்பெற்ற பாக்களை உடையது என்னும் வழக்கு வலியுடைத்தாகலானும் நற்றிணை நானூறு என்பதுபோல நாலடி நானூறும் தொகை நூல் என்க. அல்லதூஉம், நாலடியாசிரியர் ஒருவராயின் முன் னுக்குப்பின் முரண்தரும் கருத்துக்களும், கூறியது கூறலும், மாறுகொளக் கூறலும், தன்னுன் ஒருபொருள் கருதிக் கூறலும் இன்னோரன்ன பிழைகள் நிகழ்தற்கு இடமில்லை. ஆயின், நாலடியில் முரண்களும், கூறியது கூறல் முதலிய வழுக்களும் நிரம்ப உள்ளன. காட்டாகச் சில நோக்குவோம்.

1. நட்பியலில், "நட்பாராய்தல்" என்னும் அதிகாரத்தில்,

> "கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மைஎஞ் ஞான்றும்
> குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்(கு)
> எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
> மதுரமிலாளர் தொடர்பு." (நாலடி. ௨௧௧)

என்று வரும் வெண்பாவும்; அரசியலில், "கல்வி" என்னும் அதிகாரத்தில்,

> "கனைகடல் தண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
> நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
> தூரில்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
> ஈரமிலாளர் தொடர்பு." (நாலடி. ௧௩௮)

என்று வரும் வெண்பாவும் சொல்லாட்சி, பொருட்சிறப்பு, உவமை—இனையவற்றால் பெரிதும் ஒத்தியங்குதல் உன்னற் பாலது. நல்ல புலமை வாய்ந்த புலவர் இப்படி இருவேறு வெண்பாக்களில் ஒரே கருத்தினைச் சொல் மாற்றம் பொருள் மாற்றம் இன்றிப் புகலுதல் கூடுமா? இவ்விரு வெண்பாவும் ஒருவர் எழுதுகோலினின்றும் உதிர்ந்தவையல்ல. ஒன்றைப் பார்த்து ஒன்று எழுந்ததாகவே தெரிகிறது. இவற்றுள் ஒன்றை "வெள்ளிப் பாட"லாக மதிக்கலாம்.

2. அரசியலில் "குடிப் பிறப்பு" என்னும் அதிகாரத்தில்,

"ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்—திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்." (நாலடி. ௧௪௮)

என வரும் வெண்பா வேறு "அவதாரம்" எடுத்தலைக் கீழே காண்க :

"அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்." (நாலடி. ௧௫௧)

இப் பாடல் அரசியலில் "மேன்மக்கள்" என்னும் அதிகாரத்தில் சேர்க்கப்பெற்றுள்ளது.

3. நாலடியார் ௧௩௭ ஆம் பாடல் :

"தவலரும் தொல்கேள்வித் தன்மை உடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி."

நாலடியார் ௨௩௩ ஆம் பாடல் :

"நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால்—நுண்ணூல்
உணர்விலர் ஆகிய ஊதியம் இல்லார்ப்
புணர்தல் நிரயத்துள் ஒன்று."

இவ்விரு வெண்பாக்களில் எது 'அசல்', எது 'நகல்' என்பது எப்படிக் கூற இயலும்!

இக்காலத்தில் வெண்பா எழுதும் போட்டிக்கு ஈற்றடி தந்து எழுதினால் பாக்கள் எங்ஙனம் அமைகின்றனவோ அப்படியே சில வெண்பாக்கள் நாலடியாரில் உள்ளன.

நாலடி ௧௫௭ ஆம் பாடல் :

"செய்கை அழிந்து சிதன்மண்டிற் றாயினும்
பெய்யா ஒருசிறை பேரில் உடைத்தாகும்
எவ்வம் உழந்தக் கடைத்தும் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை."

நாலடி கருந ஆம் பாடல் :

"நரம்பெழுந்து நல்கூர்ந்தார் ஆயினும் சான்றோர்
குரம்பெழுந்து குற்றம்கொண் டேறார்—உரங்கவறு
உள்ளமெனும் நாரினாற் கட்டி உளவரையாற்
செய்வர் செயற்பா லவை."

நாலடி கஅரு ஆம் பாடல்.

"உறுபுனல் தந்துல கூட்டி அறுமிடத்தும்
கல்லூற் றுழியூறும் ஆறேபோல்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணும் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை."

இம்மூன்று பாக்களும் மூவேறு அதிகாரங்களில் காணப்பெறு கின்றன. இவற்றை ஒரு புலவர் பாடுதல் கூடாது

இனி, 'மாறுகொளக் கூறல்' என்னும் வழுவுண்மைக்கு ஒரு சான்று பகரலாம். "பெரியாரைப் பிழையாமை" என்னும் அதிகாரத்தில்,

"தெரியத் தெரியும் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்—பெரிய
உலவா இருங்கழிச் சேர்ப்ப! யார் மாட்டும்
கலவாமை கோடி உறும்."

என்ற பாடலும்; "அறிவுடைமை" என்னும் அதிகாரத்தில்,

"உணர உணரும் உணர்வுடை யாரைப்
புணரிற் புணருமாம் இன்பம்—புணரின்
தெரியத் தெரியும் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமாம் நோய்."

என்ற பாடலும் மாறுபட்டு மயங்குதல் காணலாம்.

எனவே, இதுகாறும் எழுதியவாற்றால் நாலடிப் பாக்கள் ஒருவரால் பாடப்பெற்றிருத்தல் ஒவ்வாது என்பதும்; பலகாலத் துப் பல புலவரால் பாடப்பெற்றிருத்தல் வேண்டும் என்பதும் உணரலாம். பழைய வெண்பா ஒன்றில்,

"ஞாலத் துழிதரு நற்பாட்டே கொண்டடக்கி
நாலடி நானூ றெனப்பெயரால்—வாலிதின்
ஈட்டித் தொகுத்தான் இசைசால் பதுமனே
கூட்டமைந்த மூன்றுபால் கொண்டு."

என்று காணப்பெறுதலான், தனிப் பாடல்களாகத் திகழ்ந்த நானூறு பாடல்களைப் பால், இயல், அதிகாரம் என்று பகுப்பு முறை செய்து பதுமனர் தொகுத்தார் என்பது அறியப்படும்.

ஆகலான், நாலடியாரை நக்கீரர் பாடினர் என்பது ஒரு சிறிதும் பொருந்தாத போலியுரையாதல் தெள்ளிதாம். நம் கைக்கு அகப்படாத நூல் வரிசையில் "நக்கீரர் நாலடி நானூற்று வண்ணத்தை"யும் சேர்த்துக்கொள்ளுதல் நல்லதாம்.

இனி, இலக்கண நக்கீரர் கி.பி. 7 ஆம் நூற்றாண்டினர் என்று பிள்ளை அவர்கள் எழுதியுள்ளனர். யாப்பருங்கலக்காரிகை உரைகாரர்,

"ஐஞ்சீர் அடுக்கலும் மண்டில மாக்கலும்
வெண்பா யாப்பிற்கு உரிய வல்ல."

என்னும் சூத்திரத்தை நத்தத்தனர் அடி நூலில் எடுத்தோதினர் என்று இயம்புகின்றார். ஆயின், இச் சூத்திரமே யாப்பருங்கல விருத்தியில் நக்கீரரால் யாக்கப்பெற்றது என்று கூறப்பெறும். இச் சூத்திரம் எழுதியவர் நக்கீரரே; நத்தத்தனர் என்றல் இடையில் தோன்றிய வழு என்பதற்கு மேற்கோளாக,

"சேரும் நேரடிப் பாவிலேஞ் சீரடி
ஏரும் வெள்ளையல் லாவழி என்பது
சோர்வி லாததொல் காப்பியத்து நக்
கீரனர் அடிநூல் உள்ளும் கேட்பவே."

என்னும் கலிவிருத்தத்தைக் காட்டிப் பிள்ளை அவர்கள் பேசுவது உறுதி நிறைந்த கருத்தாகும். ஆயின், ஒரு சான்றும் உரைக்காமல் "அடிநூல்" கி. பி. ௬௫௦ இல் எழுந்தது என்னும் வெற்றாகம் பற்றுக்கோடின்றிப் பாடுபெறுகிறது! மேற்காட்டிய மேற்கோளில் தொல்காப்பியர்க்கு அடுத்து நக்கீரனரைக் குறித்துள்ளமையான் இவரைக் கடைச்சங்ககால நக்கீரர் என்று கருதலாம். கிடைத்துள்ள ஒரு சூத்திரத்தைக் கொண்டு காரணம் கூறாமல் அடிநூல் ஆசிரியர் கி. பி. 7 ஆம் நூற்றாண்டினர் என்று முடிபு கூர்தல் ஒவ்வாது. கடைச்சங்ககாலப் புலவர் காக்கைபாடினியார் யாத்த சூத்திரங்கள் உரைகாரரால் மேற்கோள் காட்டப்பெறலான், அவராற் காட்டப்பெறும் நக்கீரர்தம் அடிநூலும் கடைச்சங்க காலத்தைச் சார்ந்ததாகல் வேண்டும்.

எனவே, இதுகாறும் எழுதியவாற்றால் பிள்ளையவர்கள் கருதுமாறு கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் நக்கீரர் ஒருவர் விளங்கினரல்லர் என்பதும்; களவியலுரை, அடிநூல் எழுதியவர் சங்க காலத்தவர் என்பதும்; நாலடியார்க்கும் நக்கீரர்க்கும் தொடர்பில்லை என்பதும் பிறவும் போதரும்.

இனி, திருமுருகாற்றுப்படை நீங்கிய 11 ஆம் திருமுறையில் ஒன்பது பிரபந்தங்களையும் நக்கீரதேவ நாயனர் பாடினரென்

றும், அவா காலம் கி. பி. 850 என்றும் பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார். கண்ணப்பரைத் திருவாசகத்தில் குறிக்கும் மாணிக்கவாசகர் கி. பி. 9 ஆம் நூற்றாண்டினர் எனக் கருதிக்கொண்டு, "திருக்கண்ணப்ப தேவர் திருமறம்" பாடிய காரணத்தால் நக்கீரதேவ நாயனாரும் அக்காலத்தவரே என்று அறிவிக்கின்றார். கண்ணப்பரைப் பற்றி இவ்விருவரும் பாடியிருத்தலை மாத்திரம் துணைகொண்டு கால ஆராய்ச்சி புரிதல் சீலமன்று. கி. பி. 7 ஆம் நூற்றாண்டினராய காழியூர்ப் பிள்ளை,

> "வாய்கலச மாகவழி பாடுசெயும் வேடன்மல ராகுநயனம்
> காய்கணையி னாலிடந் தீசனடி கூடுகா ளத்திமலையே."

> "கண்ணப்பற் கருள்செய்த கயிலை எங்கள்
> அண்ணலா ரூராதி யானைக் காவே."

என்றும்; திருநாவுக்கரசர்,

> "கண்ணப்பன் கண்ணப்பக் கண்டுகந்தார்."

> "கண்ணப்பர்க் கருள்செய்த காளை கண்டாய்."

என்றும்; கி. பி. 8 ஆம் நூற்றாண்டினராகிய நம்பியாரூரர்,

> "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்."

> "கண்ணப்பன் கணம் புல்லன் என்றிவர்கள்,
> குற்றம் செய்யினும் குணமெனக் கருதும் கொள்கை."

என்றும் கண்ணப்பரின் பெருமையினைப் புகழ்ந்து பரவுகின்றனர். கல்லாடரும் "திருக்கண்ணப்ப தேவர் திருமறம்" என்றொரு பாடலில் பரசுகின்றார். பிற்காலத்துப் பிறங்கிய பட்டினத்துப் பிள்ளையும்,

> "......... .... தொண்டு செய்து
> நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனலன் நானினிச்சென்
> றாளாவ தெப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே."

என்று இயம்புகின்றார். எனவே, மாணிக்கவாசகர் ஒருவர்தாம் கண்ணப்பரைப் பாடியுள்ளார் என்று கொண்டு நக்கீரதேவ நாயனார் அடிகள் காலத்தவர் என்றல் யாண்டுப் பொருந்தும்? நாயனாரின் கால ஆராய்ச்சிக்குக் கண்ணப்பர் வரலாறு மாத்திரம் உதவாது. நாயனார் தம் ஒன்பது பிரபந்தங்களிலும் குறிக்கும் அடியார்கள் அனைவரின் வரலாறுகளையும் உன்னிப்பாக உற்று நோக்குதல் வேண்டும். நாயனார் சமய குரவராய சம்பந்தரைப் பற்றியாதல், சொற்கோவைப் பற்றியாதல், சுந்தரரைப் பற்றியாதல் ஒரிடத்தும் பாடினாரல்லர்; மூவர்க்கும் முற்பட்ட சண்டி, கண்ணப்பர், சாக்கியர், கோச்செங்கணார்—இவரையே குறித்துள்ளார்:

“ மானுடன் ஆகிய சண்டியை
வானவன் ஆக்கியும்.” (கோபப் : ௧0-௧௧.)

“ கண்ணப்ப ராவூர் கதை.” (கயிலைபாதி. ௯௧௨-௪.)

“ கற்கொண் டெறிந்த சாக்கியன் அன்பு
தற்கொண் டின்னருள் தான்மிக வளித்தும்.” (கோபப்: ௩௭-௩௮.)

“ சீர்மிகு சிலந்திக்கு இன்னர சளித்தும்.” (,, : ௩௮.)

என வரும் பகுதிகள் காண்க.

இனி, முருகனைப் பற்றி ஒரு சில இடங்களில் உரைக்கும் நாயனர் மூத்தபிள்ளையாரைப் பற்றி ஓரிடத்தேனும் உரைத்தாரல்லர். கி. பி. 600-க்குப் பின்னரே விநாயகர் வழிபாடு தமிழகத்தில் நிலவிற்று என்பது ஆராய்ச்சியறிஞரின் முடிந்த கருத்தாகும். எனவே, நக்கீரதேவ நாயனர் மூவர்க்கும் முற்பட்டு வாழ்ந்தவர் என்பதும்; கூடக்குறைய கி. பி. 6 ஆம் நூற்றாண்டினராகக் கருதலாம் என்பதும் வெள்ளிடைமலையென விளங்கக் காணலாம்.

நக்கீரர் நால்வர் என்று நவின்ற பிள்ளை அவர்கள் தமது *“நெடுநல் வாடையும் நக்கீரரும்” என்ற கட்டுரையில், “இனி நக்கீரரைப் பற்றிச் சிறிது கூறி எனது ஆராய்ச்சியை முடிக்கிறேன்.......இவரியற்றிய நூல்கள் முருகாற்றுப்படையும், நெடுநல்வாடையும், பதினோராம் திருமுறையில் சில பிரபந்தங்களுமாம்” என்று சாற்றுகின்றார். பிள்ளை அவர்கள் ஓரிடத்திற் கூறிய கருத்திற்கும் பிறண்டு வரையும் கருத்திற்கும் வரைக்கும் தரைக்கும் இடையுள்ள வேற்றுமையிருத்தல் தேற்றமாம்.

இனி, இதுகாறும் இயம்பியவாற்றான் பிள்ளை அவர்கள் கூறும் ஒவ்வொரு கருத்தும் செவ்வையற்றது என்பதும்; நக்கீரர் என்ற பெயருடன் இருவரே வாழ்ந்தனர் என்பதும் தெளிவுறப் பிறங்குதல் உணரலாம். அவர் காலம், நூல்கள் இனையவற்றை இங்ஙனம் பகுத்துக்காட்டலாம்:

நக்கீரர்	நூல்கள்	காலம்
1. சங்ககால நக்கீரர்	தொகைநூற் பாக்கள், நெடுநல்வாடை, அடிநூல், களவியல் உரை, திருமுருகாற்றுப்படை	கி.பி. 120-200
2. நக்கீரதேவ நாயனர்	11 ஆம் திருமுறையில் ஒன்பது நூல்கள்	கி.பி. 480-550

* “ இலக்கிய தீபம் ” பக்கம் ௬௫.

திரு. செல்லூர்கிழார் செ. ரெ. இராமசாமி பிள்ளையவர்கள்
மறைவு குறித்த

இரங்கற்பாக்கள்

செல்லூர்க்கி ழார்என்னும் செழும்பேர் பூண்ட
செ.ரெ. இராமசாமி பிள்ளை என்னும்
தொல்நூலுக் குரைசெய்த தொண்டர் நம்தம்
தூயதமிழ்த் தாத்தாவிற் கிரங்கல் சொல்வோம்!
நல்லூழால் நல்நூல்கள் பலவுங் கற்று
நமதுசைவ நூற்பதிப்புக் கழகந் தன்னில்
வல்லவராய் அடியார்க்கு நல்லா ரொத்து
வளவுரையால் பன்னூல்க ளோங்கச் செய்தீர்!
நன்னூலின் முன்னுரையும் காஞ்சிப் புராண
நயவுரையும் திருப்பூவண நாதர் நூலும்
பொன்றாத பெரும்புகழைக் கொடுக்கத் தாங்கள்
போதுமெனச் சென்றீரோ! புலவர் ஏறே!
அன்றிறந்த வாந்தையாருக் கழுத கண்ணீர்
அவ்வழியே தங்களுக்கும் வெள்ள மொத்து
நன்கறிந்த தமிழ்க்கண்கள் கொட்டி வாட
நற்புலவீர்! சென்றுவிட்டீர்! வருந்துமாறே!
நாவலரும் சதாசிவபண் டாரத்தாரும்
இராகவவை யங்காருஞ் சென்றாற் போல
பாவலரே! பைந்தமிழ்நூற் செல்வர் சென்றீர்!
பண்டிதரும் தொண்டர்களும் ஏங்கி நிற்க
தேவர்களாய் அறனறிந்த மூத்தோர் எல்லாம்
தென்தமிழை விட்டுவிட்டுப் போகல் நன்றோ!
சாவென்று மணுகாத நூல்கள் வாழும்
சக்திதரு நல்லூற்றே வற்றல் நன்றோ!

பசும்பொன் இளையோன்.

நல்லதமிழ்ச் செய்யுள்கட் குரைசெய்தே
நன்மக்கள் ஆய்ந்தவற்றை இன்புற்றே
பல்லோரும் உன்னியவை உணர்ந்திடவே
பசுந்தமிழில் ஆற்றியநல் லுரைவல்லோன்
''செல்லூர்க்கி ழார்''இறைதாள் சேர்ந்ததனால்
செந்தமிழில் நல்லுரைதான் இனியேதாம்
அல்லலின்றி அன்னார்தம் ஆவியேதான்
அமைதியுற இறைவனையே பணிகுவேனே!

வெண்பாவூர். பொ. திருஞானம்.

திருக்கோளிலிக் கல்வெட்டுக்கள்

[வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார்]
(துணைக்கல்வெட்டு ஆராய்ச்சியாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)

திருக்கோளிலி என்பது சோழநாட்டுத் தேவாரம் பெற்ற தலங்களுள் ஒன்றாகும். இது தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமானது. இதுபொழுது அவ்வாதீனத்தில் இருபத்தைந்தாம் பட்டத்தில் எழுந்தருளி அருளாட்சி நடத்தியருளும் அருங்கலை விநோதரும் பெருங் கொடை வள்ளலுமாகிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் கட்டளையிட்டருளியபடி, அடியேன் இக் கோயில் கல்வெட்டுக்கள் அனைத்தையும் 23—2—1947 முதல் 25—2—1947 முடிய மூன்று நாட்கள் தங்கிப் படித்து எழுதினேன். ஆதீனத்திற்கு ஒரு கையெழுத்துப் பிரதியை அனுப்பிவிட்டு அக் கல்வெட்டுக்களின் சுருக்கத்தை 'செந்தமிழில்' வெளியிட்டுள்ளேன். இக்கோயில் கல்வெட்டுக்கள் இதுகாறும் கல்வெட்டுத்துறையாளரால் வெளியிடப் பெறவில்லை. யான் எழுதி வந்த கல்வெட்டுக்களின் மூலங்கள் (The Texts) இரண்டினை ஆராய்ச்சி உலகிற்குப் பெரிதும் பயன்படுமென்று எண்ணி வெளியிடுகின்றேன்.

இங்குக் கொடுக்கப்பெற்றுள்ள இரு கல்வெட்டுக்களில், கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தர பாண்டிய தேவர் கல்வெட்டு மூவர் முதலிகளின் திருப்பாடல்களுக்குத் தேவாரம் என்னும் பெயருண்மையும், திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜ ராஜ தேவரின் கல்வெட்டு சிவன்படவர் என்பதே செம்படவர் என்று இக்காலம் வழங்கப் பெறுகிறதென்பதையும் புலப்படுத்துவனவாகும்.

I

இடம்: மகாமண்டபத்தின் தென்புறம்

அரசன்: கோச்சடைய பன்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள், சுந்தரபாண்டிய தேவர்.

வரி

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோச்சடைய பன்மர் திரிபுவனச் சக்கரவர்த்திகள்
2. சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு கஉ (12) வது எதிராமாண்டு
3. ஆடிமாதத்து இருபதாந் திய்தி நாள் உடையார் திருக்கோளி
4. லிஉடையார் கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர் கன்மிகளோ

5. ம் வியாபாரிகளில் மாங்குடையான் பிச்சன் கணபதி ஆண்டார்
6. இசைவநீட்டுக் குடுத்தபரிசாவது. இந்நாள் முதல் திங்கள் திருநாள்
7. திருவாதிரை தொறும் இவர்க்கு நன்றாக பெருமாளும் நாச்சியா
8. ரும் சிறப்பமுது செய்தருளி திருவுலா செய்தருளவும் ஆளுடை
9. ய பிள்ளையார் திருஞான அமுது செய்தருள திருவுலாச் செய்தருள தேவாரம் செ
10. ய் தருளவும் கட்வதாக இந் நாயனார் திரு நாமத்துக் காணி இடையிலியில் விலை
11. கொண்டு இட்ட கீழை வேலிக் கண்டத்து நிலம் கல்லி இந் நிலம் ஒன்றே மூன்
12. றுமாவும் உள்ள முதல் கொண்டு சந்திராதித் தவரையும் இப்படிகளிலே திருவுலாச்
13. செய்தருளக் கடவதாக சம்மதித்தோம், இந்நிலம் ஒன்றே மூன்று மாவுக்கும் பண்
14. டாரத்து இற்றை நாளில் ஒடுக்கின பணம் உ௱௬0 (260) இப்பணம் இரு நூற்று அறுப
15. துக்கும் இந்நிலம் ஒன்றே மூன்று மாவுங் கொண்டு சந்திராதித்தவரையும்
16. இப்படித் திருவுலாச் செய்தருளப் பண்ணக் கடவதாகச் சம்மதித்தோம் மாங்குடி
17. யான் பிச்சன் கணபதி ஆண்டார்க்கு ஆதி சண்டேஸ்வர தேவர் கன்மிகளோம்.
18. இப்படிக்கு உடையார் திருக்கோளிலி உடையார் கோயில் கணக்கு பட்டின முடையா
19. ன் கணக்கு துறையாண்டான் திருவகம்படிப் பிரியன் எழுத்து. இப்படி அறிவேன்
20. மாங்களூர்ச் சாரம்பட்டனேன் இப்படி இவை கோளிலிப் பெருங் கோயில்
21. உடையார் ஸக ஞானமைக்கு இவை சாரம் பட்டனேன் இப்படிக் கிவை தேவ
22. கன்மி என்னையாளுடையான் பழந்தி யாரப் பிர்மராயன் எழுத்து. இப்படிக்கி
23. வை உடையார் திருக்கோழிலி உடையார் கோயில் அகாரணக் கண் காணி
24. செல்வம் பிள்ளை ... தன்மதேவர் எழுத்து. இப்படிக்கிவை கோயில் கணக்
25. கு பட்டின முடையான் உதவினன் திருவாரமீஸ் வரமுடையான் எழுத்து.

II

வரி

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள்
2. ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு ச (4)
3. வது மார்கழி மாதத் தொருநாள் உ
4. டையார் திருக்கோளிலி உடை
5. யார் கோவிலில் முன்னுளில் சிவன்
6. படவரில் ஆலன் எழுந்த ருளுவித்த
7. அதிபத்தநாயனுற்கு திருப்படிமா
8. ற்றுக்கு இவன் தன் சாதியார் பக்க
9. ல் இரந்து பெற்ற காசாய் கலேயி
10. ல் காவசேரி ஐய்யன்னைய் பட்டன்
11. மகன் தாமோதரப் பட்டன்பக்கல் வெ
12. நல் பொலிசைக்கு குடுத்த காசாய்
13. இவன் ஒடுக்கின காசு இரண்டாயிரத்து நூறு. இக்கா
14. சு இரண்டாயிரத் தொரு நூறும் கை
15. கக் கொண்டு திருப்படி மாற்றுக்
16. கு நாள் ஒன்றுக்கு இரு நாழி அரிசி
17. அமுதுபடிக்கு அளிப்போமாகவு
18. ம் நாங்கள் இப்படி செய்வோ
19. மாகவு ஸம்மதித்தோம்.

அமைதி எய்துக!

[நாஞ்சில், கா. கணபதி.]

பண்டைப் புலமை பழுத்த பதியாம்
செல்லூ ரதற்குச் செம்மைக் கிழாராய்த்
தோன்றிய ஆன்ற செந்நாப் புலவ!
செ. ரெ. இராம சாமியே இன்றே
இவ்வுல ககன்று அவ்வுல கடைந்தனை
அவ்வுல கதனில் அமைதி எய்துக!

உணர்க அன்னோர்!

[வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனார்.]

(தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்.)

அறங்கண்ட துறைபலவும் அமைத்துக் காத்தே
ஆருயிருந் தம்முயிராய் அன்பு பேணித்
திறங்கண்ட நம்முன்னோர் வாழ்ந்த நாடு;
தெளிவுடைய சீலத்தால் பண்பு தன்னால்
மறங்கண்ட திருநாடு; மானங் காக்க
மன்னுயிரை முன்னிழக்கும் மறவர் கூட்டம்
விறல்கண்ட தொன்னாடு; வீரம ஈரம்
விரிந்திடுமிந் தியநாடாம் நமது நாடே. (க)

தோளிமயம் போலவெனில் உள்ளந் தானே
துகளறுநற் கங்கையெனப் பொன்னி யென்ன
வாளிதெனுந் திண்காட்சி வாய்ந்த நம்பால்
வடக்கரணும் இமயமெனு மன்னன் தன்னை
நாளிதெனப் பிறர்புகுந்து நலிய வந்தால்
நாமுறங்கிக் கிடப்பேமோ? எழுந்தி டேமோ?
கோளிதெனக் குமுறியெழும் புலியே போலக்
குருடரினஞ் சாயவெழுந் தார்த்தி டேமோ? (உ)

நம்மலையில் நம்மெல்லைக் கோட்டைத் தாண்டி
நட்பினராய்ப் புறங்காட்டிச் சீன வீரர்
தம்மதெனக் குதித்தாரென் றுரைக்கக் கேட்பேம்;
தமிழ்மறவர் குழுவெந்நாள் தளர்ந்து நிற்கும்?
செம்மைநெறி மாறியவர் எவரா மேனும்
செப்பனிடத் தயங்கார்செந் தமிழ ரன்றோ?
கொம்மையுடைப் படைபுரண்டே ஆர்த்த தேனும்
குலைப்பதுண்டோ அறந்தன்னைக்? கூறீர், சான்றீர்! (ங)

கூறிவந்த ஐம்பெருஞ்சீ லங்கள் எங்கே?
குலவிநின்ற நட்புரிமைத் திறமும் எங்கே?
மீறிவந்த செஞ்சீனர் செயலும் எங்கே?
மேலெழுந்தே அறமாறிக் கிளர்ந்த தெங்கே?
நேரிதன்று மெனப்பெரியோர் முழங்கக் கேட்டும்
நில்லாரேல், தென்னகமும் வடபால் நாடும்
சீறிவரும் என்றமொழி நம்ம தன்று;
செந்தமிழாஞ் செல்விமொழி; உணர்க அன்னோர்! (ச)

செய்திகளும் குறிப்புக்களும்

(க) பழனியில் கீழ்த்திசைக் கலைக் கல்லூரி

தமிழ் சமக்கிருதம் முதலிய மொழிகளைப் பயிற்றுவிக்கவும், சமயக் கருத்துக்களைப் பரப்பவும் பழனிப்பதியில் கீழ்த்திசைக் கலைக்கல்லூரி ஒன்று நிறுவப்படும். இஃது அடுத்த ஆண்டு கல்லூரித் துவக்கக் காலத்திலிருந்து செயல்படும். 15 எக்கர் நிலம் இதற்கென வாங்கப்பட்டுள்ளது. இக்கல்வி நிலையம் பழனி அறநிலையப் பாதுகாப்பு நிலையம், பிற தென் மாவட்ட அறநிலையப் பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றின் அதிகப்படி வருவாயினின்றும் நடத்தப்படும். தேவாரம், திருவாசகம், பிரபந்தங்கள், புராணங்கள் முதலியனவும், ஓவியம், இசை முதலிய கலைகளும் இங்குப் பயிற்றுவிக்கப்படும். பழனி அறநிலையப் பாதுகாப்பாளர்களின் வேண்டுகோளின்படி சென்னைப் பல்கலைக் கழகத்தார் பி. ஏ. வகுப்பு ஒன்றை இக் கலைக்கல்லூரியில் நிறுவுவதெனவும் முடிவு செய்துள்ளனர்.

குறிப்பு: நாடு நலம்பெறக் கல்லூரிகள் பலதேவை. அதற்கு அறநிலையங்களின் பொருள் பயன்படுத்தப்படுவது மிக மிக பொறுத்தமுடைத்தாகும். பழனி அறநிலையப் பாதுகாப்பாளரின் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

(உ) காஞ்சி நகராட்சி மண்டபத்தில் திருக்குறள்

அண்மையில் நடைபெற்ற காஞ்சி நகராட்சி மன்றக் கூட்டமொன்றில், நகர மண்டபத்தில் திருக்குறள் பாக்களை 'எனமல் போர்டு'களில் எழுதி அமைப்பதெனவும், அதற்கு ரூ. 150 செலவு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

குறிப்பு: குறள் நெறி பரவ இது நல்லமுறை. இதனை மற்ற நகராட்சி மன்றங்களும் பின்பற்றுக.

(ங) ஹரப்பா நாகரிகச் சின்னங்கள் கண்டு பிடிப்பு

ஆமதாபாத் நகருக்கு 48 கல் தொலைவிலுள்ள லொதால் என்னுமிடத்தில், அண்மையில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் செய்த ஆராய்ச்சியின் விளைவாக முன்னர் ஹரப்பா, மொகஞ்சதாரோ என்னுமிடங்களில் கண்டு பிடிக்கப்பட்டது போன்ற பண்டை நாகரிகச் சின்னங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து நாலு தெருக்களும், குளியல் அறை முதலிய வசதிகளுடன் கூடிய பழைய வீடுகளும், நிலத்தின் ஊடே செல்லும் சாக்கடை அமைப்புக்களும், கப்பற் றுறைமுகம் ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அங்கு வாழ்ந்திருந்த அப்பண்டை மக்கள் கதிரவனை வணங்கி வந்ததாகவும் தெரிகிறது.

குறிப்பு: இம்மாதிரி ஆராய்ச்சிகள் மூலம் பல வரலாற்றுண்மைகள் அறியக்கிடைக்குமாதலால், அரசியலாரின் இம்முயற்சியைப் பாராட்டுவதோடு, தமிழ்நாட்டில் காவிரிப்பூம்பட்டினம் கொற்கை போன்ற இடங்களையும் அகழ்ந்து பார்த்தால் பல வரலாற்றுண்மைகளை அறியக் கூடும் எனவும், இதனைத் தமிழக அரசின் புதைபொருளாராய்ச்சியாளர் சிந்தித்துப் பார்க்கவேண்டுமெனவும் கூறுகிறோம்.

(ச) கல்லூரிகளில் தமிழ்

"தமிழ்மொழி நல்ல முறையில் வளர்வதற்கான திட்டங்களை வகுக்கத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக்குழுவினை ஏற்படுத்தியுள்ளோம். கோயம்புத்தூரிலுள்ள அரசினர் கலைக்கல்லூரியில் அடுத்த ஆண்டி லிருந்து பி. ஏ. வகுப்பில் தமிழ்மொழி மூலம் பாடங்கள் கற்பிக்கத் திட்டமிட்டிருக்கிறோம். 1963—64இலிருந்து எல்லாக் கல்லூரிகளிலும் பி. ஏ. வகுப்பில் தமிழில் கற்பிக்கும் முறையைத் துவங்கி நடத்த முடிவு செய்திருக்கிறோம்" என்று தமிழ நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கடந்த 10-3-60 இல் சட்ட மன்றத்தில், 1960—61 வரவு செலவுத் திட்டம் வெளியிட்டுப் பேசியகாலை குறிப்பிட்டார்.

குறிப்பு: தமிழின் ஆக்கத்திற்கு ஊக்கமளிக்கும் திட்டத்தைத் தெரிவித்திருக்கும் அமைச்சரவர்களைப் பாராட்டுகிறோம்.

(ரு) மனிதனின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த உயிர் நூல் புலவரான சர். அலிஸ்டர் ஹார்டி என்னும் 64 வயதுடைய பேராசியர், மனிதனின் தோற்றம் பற்றிய ஒரு புதிய தத்துவத்தைக் கூறுகிறார்.

அவர் இங்கிலாந்தில் பிரைட்டன் என்னுமிடத்தில் நடைபெற்ற கடல் பற்றிய அறிவியலாராய்ச்சியாளர் கூடிய மாநாட்டில் பேசிய காலை, "மனிதன் ஒரு காலத்தில் கடல்வாழ் மனிதக் குரங்கினத்தைச் சேர்ந்தவனாக இருந்தான். இற்றைநாள் காணப்படும் மனிதக் குரங்கின் உடலமைப்பையும் மனிதனின் உடலமைப்பையும் ஒப்பிட்டுக் காணுங்கால் இவ்வுண்மை தெரியும் இவ்வுண்மையினைக் கண்டறிய நான் 30 ஆண்டுக்காலம் ஆராய்ச்சி செய்தேன். இம்மனிதக் குரங்கினம் காடுகளில் வசித்தபோது, அங்கு விலங்கினங்களுக்கிடையே ஏற்பட்ட உணவுப் போராட்டத்தின் விளைவாக இவை கடல்களை நாடிச்சென்றன. அக் கடல் வாழ்வில் அவை பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தன. அங்கே அவை வாழுதற்கேற்ப உடலமைப்புக்கள் மாறின. அவை நிமிர்ந்து நிற்க ஆரம்பித்தது அங்கேதான். நீந்துதற்கு ஏற்ப நீண்ட கால்களும் கைகளும் அமையப்பெற்றதும் அங்கேதான். இங்ஙனம் காட்டிலிருந்து மனிதக்குரங்கு கடலுக்கு விரட்டப்பட்ட காலம் பத்து லட்சம் ஆண்டுகட்கு முன்பாகும். பின்னர் அவை வளர்ச்சியில் மாறுதலுற்று ஐந்து லட்சம் ஆண்டுகட்குமுன் மனித உருவோடு வெளிப் போந்தன" என்று கூறினர்.

(கூ) திரு. நாசருக்குத் திருக்குறள் பரிசு

அரபு நாடுகளின் இணைந்த குடியரசுத் தலைவரான நாசர் கடந்த 5-4-60 பிற்பகல் சென்னைக்கு வருகை தந்தார். சென்னை ஆளுநர் திரு. விட்ணுராம் மேதியவர்களும், முதலமைச்சர் திரு. காமராசரும் அவரை வரவேற்றனர். பின்னர் நகரமக்களின் சார்பில் சென்னை நகராண்மைக் கழகத்தினரும் திரு. நாசரை வரவேற்று மகிழ்ந்தனர். நடிகர் திரு. சிவாசி கணேசன் திரு. நாசரவர்களுக்குக் கழக வெளியீடாகிய ஆங்கிலத்தில் போப்பையர் மொழிபெயர்த்த 'திருக்குறள் பதிப்பொன்றை, அழகிய வெள்ளிப்பேழையில் வைத்துப் பரிசாக வழங்கினர். நாசர் தமிழக மாந்தருக்குத் தம் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்தார்.

மதிப்புரை

ஞானவாழ்க்கை அல்லது திருமூலர் உண்மைகள் :

ஆக்கியோர் : ஆசிரியர் 'இளவழகனார்.' வெளியிடுவோர்: சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார். விலை ரூபா 1 00. செம்பொருட்டுணிவினைச் செந்தமிழால் கிளர்ந்தெடுத்தோதும் நெறி செந்நெறி யெனப்படும். இதுவே திருநெறி, சிவநெறி, ஒளிநெறி, நன்னெறி, பெருநெறி, பொதுநெறி எனவும் அழைக்கப்படும்." இந்நெறியினை விளக்கும் திருவருள் நாலிருவகையாகும். ஒன்று. புகழ்நூல்; மற்றொன்று பொருள்நூல். புகழ் நூலைத் தோத்திரமெனவும், பொருள் நூலைச் சாத்திரமெனவுங் கூறுப. புகழ்நூலைத் 'திருமாமறை' எனவும், பொருள் நூலைத் 'திருமாமுறை' எனவுங் கூறுப. திருமாமறையினைத் திருமுறை எனவும், திருமாமுறையினை மெய்கண்ட நூல்கள் எனவும் வழங்குப. திருமுறைகள் பன்னிரண்டு. மெய்கண்ட நூல்கள் பதினான்கு. வரன்முறையான் நோக்குவார்க்கு மெய்கண்ட நூல்களும் பன்னிரண்டேயாம் என்பது தெளிவு. மெய்கண்டார் காலந்தொட்டு எண்ணுவதே வரன்முறையாம். இவ்விரு பெருநூல்களும் நெறியின் புண்ணியக்கண் இரண்டாகும். இவ்வகையான் அமைந்த எண்ணிக்கைப் பொருத்தமும் இவை செந்தமிழ் மொழியின் உயிரேயாம் என்பதனை உணர்த்தும். செந்தமிழ் மொழியுயிர்கள் பன்னிரண்டு. அவை குறில் ஐந்தும் நெடில் ஏழுமாம். நெடிலொத்து அடங்கன்முறை ஏழும், குறிலொத்து எஞ்சியவை ஐந்துமாகத் திகழ்கின்றன. இவை குறிப்பான் சிவபெருமானின் திருவருளாற்றல்களை எழினையும், தொழில்கள் ஐந்தினையும் அறிவிப்பனவாகும்.

திருமந்திரம் பத்தாம் எண்முறைக்கண் நின்று நிலவும் தெய்வத் திருமுறையாகும். இதுவே தமிழாகமம். திருமூல நாயனார் 'அரனடி நாடொறுஞ் சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே' எனத் திருவாய் மொழிந்தருளினர். இத்தகைய தமிழாகமத்தினைத் திருக்கோவில்களிலும், திருமடங்களிலும், வாழ்க்கைத் துறைகளிலும் நடைமுறைக்குக் கொண்டுவருவார்களாயின் உண்மைச் சைவநெறி உலகெலாம் பயின்றோங்கும்; ஒற்றுமையுண்டாகும்; உணர்ச்சி பெருகும்; வாழ்க்கையின்பம் வளரும். புனைவுப் பழமைகளின் பொய்யிலா மெய்ம்மை புலனாகும். புலனாகவே வீண் ஐயங்களும் கற்பிக்கும் மாசுகளும் அகலும். புரியா மொழி வழிபாடுகள் போய்க்கழியும். செய்வார், செய்விப்பார், சேர்ந்து தொழுவார் அனைவர்கட்கும் புகல்வது புரிந்து, பொருள் தெரிந்து இன்பமேலிட்டுப் பத்திவெள்ளம் பெருகும். அதற்குப் பெருவிளக்காய் நின்று துணைபுரிவது, இவ்விளக்க விரிவுரை நூலாகும்.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் தொடக்க முதல் பண்டும் பண்டும் ஒழுக்கநெறி வழுவா விழுத்திணைப் பெரியார் பலரைக்கொண்டு சிவனெறிக்குரிய செந்தமிழ்த் திருமுறைகளையும், சித்தாந்த நூல்களையும் சொற்பொழிவுகள், நூல் வெளியீடுகள், பாடமுறைகள் வாயிலாக நன்கு பரப்பிவந்திருக்கின்றனர்; வருகின்றனர்; வருவர். ஆசிரியர் இளவழகனாரைக்கொண்டு இப்பொழுது இருபதாண்டுகளாக இத்தொண்டினைப் புரிவித்து வருகின்றனர். அவற்றுள் 'திருமந்திர விரிவுரை' பதினைந்தாண்டுகளுக்குமுன் ஐந்தாண்டுகள் கிழமைக்கிருமுறையாகத் தொடர்ந்து நடந்து வந்தது. அதன் பிழிவாகவே இந்நூல் வெளிவந்துளது. இதன்கண், க. பொதுப்பாயிரம், கடவுள் வாழ்த்து

முதல் அறஞ்செயான் திறம்வரைப் பத்துப் பகுதிகளும், உ. அவையடக்கம், தற்சிறப்புப்பாயிரம், திருமூலர் தம் வரலாறு கூறுதல், சிறப்புப் பாயிரம் முதலிய சில பகுதிகளும் சேர்ந்து 164 திருமந்திரங்கள் வெளி வந்துள்ளன. திருமந்திரங்களுக்குக் கருத்தும் விளக்கமும் தெளிவு பெறக் காரணத்துடன் முதற்கண் புகன்று அடியில் அவற்றிற்குரிய திருமந்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவை கற்போர்க்குக் கழிபேரின்பம் பயப்பனவாகும். உரை திட்பநுட்பச் செறிவும் ஆற்றொழுக்கும் பொருந்தியன. ஆசிரியர் இளவழகனர் திருக்கழுக்குன்றத்தின்கணுறைந்து அகத்தவமுயற்சியால் அவ்வப்போது வெளிவந்துள்ள மணிமொழிகளே இவ்வுரை விளக்கமாகும். இதன்கண் திருமூலர் திருவுருவப் படம் அழகுற அமைந்துளது. இதனைப் பொதுவாகச் செந்தமிழன்பர்களும் சிறப்பாகச் செந்நெறிச் செல்வர்களும் இதனை வாங்கியும் வாங்குவித்தும் கற்றுப் பயனெய்துவதுடன் ஏனையவும் தொடர்ந்து வெளிவரத் துணைபுரிவார்களாக.

யாத்திரை :

வேலூர் அன்பன் மு. பெருமாள் எழுதியது. வெளியிட்டோர்: G. முருகேச முதலியார். மலிவுப் பதிப்பு விலை ரூ 1 50. திருமுருக கிருபானந்தவாரியாரவர்களால் சாற்றுக்கவி அளிக்கப்பெற்றது. இந் நூலாசிரியர் உலகமக்கள் நன்னிலையடைந்து வாய்மை வளம் பெற்றுத் தூய்மையராய்த் தெய்வ வழிபாட்டுடன், பெரியோர் வழிநின்று தெய்வம் ஒன்றே 'என்னும் தெளிவுடையராய்ச் சமயங்கள் பெயரால் வேறுபட்டாலும் கொள்கையால் ஒன்றுபட்டதென்னும் உண்மை நெறி ஒருவரோடு ஒருவர் எவ்வகைப் பிணக்குமின்றி இணக்கமாய் இன்புற்று வாழ ஏற்ற வழிவகைகளை இந்நூலகத்து நன்கு விளக்கியுள்ளார்

சமயப் பெரியார்கள் வகுத்த வழிவகைகள், திருப்பாடல்கள், வழிபாட்டு முறைகள், திருக்கோவில்கள், ஊழ்வினை, மறுபிறப்பு, காதல், மணம் முதலிய பல பொருள்களைப்பற்றிக் கதைப்போக்கில் உரையாடல் வாயிலாக நன்கு விளக்கியுள்ளனர். 'திருப்புகழமிர்தத்' திங்கள் வெளியீட்டில் சில பகுதிகள் அவ்வப்போது ஆசிரியரவர்களால் வெளியிடப் பட்டுள்ளன. அவை பலராலும் பாராட்டப்பட்டுள்ளன. எஞ்சிய பகுதிகளையும் சேர்த்து இஃதொரு முழுநூலாக வெளிவருகின்றது. இதன்கண் 'உடல் உணர்த்தும் உண்மை' முதல் 'பெருமணம்' ஈறாக அறுபது தலைப்புக்கள் காணப்படுகின்றன. சுவை மிகுந்த பகுதிகள், தெய்வத்தை வழுத்தும் பாடல்கள், திருக்குறள் ஒழுக்கங்கள் எல்லாம் எல்லா நிலையிலுள்ள அனைவர்களுக்கும் பெருந்துணை புரிவன. மக்களின் குழந்தைப் பருவம் முதல் கோலூன்றி நடக்கும் வரையுள்ள பருவங்களையே வாழ்க்கை யாத்திரையாகச் சித்திரித்துப் பல நிறம் அமைந்த அட்டைப் படத்துடன் இந்நூல் மிளிர்கின்றது. எளிய இனிய நடை. யாவர்க்கும் வாழ்க்கைத் துணையாகக் கையகத்திருக்கத்தக்க சிறந்த நூல். எல்லாருங் கற்று இன்பம் எய்துவார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.



அருளிசைப்புலவர்
சிவத்திரு, பூ. மாரியப்ப அடிகள்